சத்தியவேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஆவணி மாதம் 27-ந் திகதிவியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 33-ம் இலக்கம்

லூர்துபதியிலே கண்கண்ட புதுமை

கீர்த்திவாய்ந்த ஓர்சத்திரவைத்தியரான டக்டர் அலெக்சிஸ் கறெல் அவர்கள் 1903-ம் ஆண்டின் வேனிற்கால ஆரம்பத்திலே லூர்துகெபியில் ஒருவர் அற்புதமாகக் குணமடைந்தமையைத் தமதுகண்ணாரக்கண்டார். தாம் கண்ட அந்தப் புதுமையாலே அவர் திகைத்து மலைத்துத் தடுமாறினின்றார். அங்கே நிகழ்வதாகச் "சொல்லப்படும் அந்தப்புதுமை"களுக்குக் காரணகாரியமான ஓர்விளக்கத்தைக் கண்டுகொள்ளுமுகமாக நுணுக்கமாய் ஆராய்ச்சி நடத்துதற்கே அவர் லூர்துபதி சென்றிருந்தார். இந்தப்"புதுமை"களுக்கெல்லாம் ஏதோ இயற்கையான வியாக்கியானம் இருக்கிறதென்றே அவர் திடமாகக்கருதினார். இவ்வாறுகருதியஅவர் லூர்துகெபியில் தங்கியிருக்கும்போதே ஒருவர்புதுமையாகக்குணமடைந்ததைத் தமது கண்முன்பாகக் கண்டார். இந்தப் புதுமை மானிடபுத்திக் கடங்காததாய் அவரைப் பெரிதும் மதிமயங்கச்செய்தது.

அங்கே புதுமையாகக்குணமடைந்த நோயாளியோ அவரது நேர்முகமான மேற்பார்வையின்கீழ் இருந்துவந்தவள். அவரைப்போலஅவளும் அதேபுகையிரதத்தில்தானே லூர்துபதிக்குப் பிரயாணஞ்செய்திருந்தாள். பிரயாணத்தின்போது அவளுடைய பரிதாபநிலைமையிட்டு அவர்கவலைதெரிவித்தார். லூர்துபதியைக் காணுமுன்னரே அவள் இறந்துபோவாளென உணர்ந்தார். ஆனால், அவள் குணமடைந்த அதேகாலையில்தானே அவள் பக்கமாக அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

அவள் சிவாபத்துக்குரிய நோய்கண்டிருந்தாள். அவர் அவளைப்பரிசோதித்தார். அவளுடையஇருதயம் அதிகம்வேகமாகப் பந்தையவோட்டம் ஓடிக்கொண்டிருந்தது. மரணத்தின் வெளுவெளுப்பு அவள்வதனத்தில் தீவிரமாகப் படர்ந்துகொண்டிருந்தது. யாவும் நம்பிக்கையற்றுக் காணப்பட்டன. அவள் உயிர்பிழைத்திருந்தால் அன்றுபிற்பகலே லூர்துகெபிக்கு எடுத்துச்செல்லப்படுவாளென்று சொன்னபோது அவர்பெரிதும் அதிர்ச்சியடைந்தார். "அவள் மரணத்தருவாயில்-அந்தியவேளையில் இருக்கின்றாள்; அவள் திருக்கெபியில் சாகவேண்டியதே"என அவர்கூறினின்றார்.ஆஸ்பத்திரியைவிட்டு அவர் வெளியேறும்போது "இதுதான் ஓர்உண்மையான ஓர்உரைகல்லாய்—பரீட்சையாயிருக்கும்; இத்தப்பெண் குணமடைவாளானால் எதையும் நான் ஏற்றுக்கொள்வேன்" என்று தம்முடைய சிநேகிதர்ஒருவரிடம் இரகசியமாகக்கூறினார்.

அன்றுபிற்பகல் டக்டர்கறெல் அந்தநோயாளியுடன்கூடச் சென்றிருந்தார். இறந்துவிடுவாளென்றே அவர் எதிர்பார்த்திருந்தார். அங்குபக்கத்தில்தானே அவர்நிற்கையில் தமதுகண்காணவெளிப்படையாய் அவள்குணமடையக் கண்டார். மரணத்துக்கான வெளுவெளுப்பு அவள்வதனத்தைவிட்டுப் பரிதிகண்டபனிபோல்உடனேஅகன்றது. அவளுடையஇருதயமும், நாடித்துடிப்பும் திரும்பவும் சாதாரணநிலைமைக்கு வந்தன. அவளுடைய சரீரத்தின் பயங்கரவீக்கம் திடீரென மறைந்துபோனது. மரணத்தின்அலகுகளிலிருந்து அவள்உள்ளபடியே பறித்தெடுக்கப்பட்டிருந்தாள். டக்டர்கறெல் இப்புதுமைநடைபெற்றமுழுநேரமும் அங்கு நிகழ்ந்தவைகளைக் கருத்தூன்றிக் கவனித்துநின்றார். தாம்அவதானித்தவைகளையெல்லாம் மிகுந்தமனவெழுச்சியுடன் தமதுகுறிப்புப்புத்தகத்தில் எழுதிக்கொண்டார்.

இதுபற்றிச் சந்தேகமேயில்லை. அப்பெண் புதுமையாகவே குணமடைந்தாள். ஆம், சந்தேகத்துக்கிடமேயில்லை. தமதுசீவியகாலத்தில் அவர்ஒருபோதுமே கண்டிராதமகாமுக்கியமான ஓர்சம்பவமாய் அதுஇருந்தது. மனமாற்றமடைந்த ஓர்புதியமனிதராக அவர் லூர்துபதியை விட்டுச் சென்றார்.

ஓர்பாலியனாய் இருந்தபோது அவர் ஓர்கத்தோலிக்கஞானஸ்நானம் அருளப்பெற்றிருந்தார். ஆனால்,அவர் ஒருபோதுமே தமதுசமயத்தை அனுசரித்ததில்லை. அதனால் ஒருபுதிய அத்தியாயத்திற்குத் திரும்புவதானது அவருக்குஇப்போது பெரிதும்கடினமாயிருந்தது. ஆயினும் தமதுகண்காணநடந்த அந்தப்பெரும்புதுமையைச் செய்த மாதாவின்திருப்பாதங்களே அவர் சரணடைந்தார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

அர்ச். தெரேசம்மாளின் பெற்றோர் முத். பட்டம் அருளப்படுவரா?

லிசியேபதிச்சின்னமலர் அர்ச். தெரேசம்மாளின் பெற்றோரான லூயிஸ்மாட்டினுடையவும், செலியேமாட்டினுடையவும் புனிதஉடல்கள் அவர்களதுகல்லறைகளின்றும் வெளியேயெடுக்கப்பெற்று அப்பதியின் மகாதேவாலயத்திற்கு அண்மையிலே மீளவும்அடக்கஞ்செய்யப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுதற்கானவிசாரணையிலே மற்றுமோர்கட்டத்தை இது குறிப்பதாகின்றது. இத்தவிசாரணையிலே மேற்றிராசனநடவடிக்கை பெயோகரில் பூர்த்தியடைந்து, அதுசம்பந்தமான சாசனங்கள் தற்போது ரோமாபுரியிலே திருச்சடங்காசார திருச்சங்கத்தின்முன் இருக்கின்றன.

மாட்டின்தம்பதிகள் பலிபீடத்தின்மகிமைக்கு உயர்த்தப்படவேண்டுமென்றும்-இயலுமானால் ஒரேநாளில்தானே அவ்விதம் உயர்த்தப்படவேண்டுமென்றும், அவர்கள் கிறீஸ்தவஇல்லத்தின் விசேஷபாதுகாவலர்களாகப் பிரகடனஞ்செய்யப்படவேண்டுமென்றும்கேட்டு உலகின் அநேகபகுதிகளிலிருந்து தொகையான விண்ணப்பங்கள் பரிசுத்தஸ்தானத்திடம்போய்ச் சரிந்துகொண்டிருக்கின்றன. இதுவிஷயமாய்ச் சாதாரணகத்தோலிக்கமக்கள் தங்கள்சொந்தவிண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு இப்போது கேட்கப்பட்டுள்ளார்கள்.

சென்றசிலவருடங்களிலே லிசியேபதியிலுள்ள அர்ச். தெரேசம்மாளின் திருசேத்திரத்திற்குச் செல்லும் யாத்திரிகர்கள்மத்தியிலே குடும்பங்களாக — அதாவது இரண்டுஅல்லது மூன்று பிள்ளைகளுடன்கூடிய— பலமுறைகளிலும் புசங்களிலே குழந்தைகளுடன்கூடிய குடும்பங்களாகச் செல்லுகிறவர்களின் தொகை அதிகரித்துக்கொண்டுவருகிறது. விண்ணப்பம் எழுதுகிறவர்கள் அர்ச். தெரேசம்மாளின் தந்தைக்கும், தாய்க்குமாக வேறுவேறாக எழுதவேண்டும்.

1887-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 20-ந்திகதியன்று பதினான்குவயதுடைய ஓர்சிறியபெண்பிள்ளை மற்றும்ஒருதொகையான பிரான்ஸிய யாத்திரிகர்களுடன் 13-ம்சிங்கராய பாப்பானவர்முன்பாக முழந்தாட்படியிட்டிருந்தாள். பாப்பானவரிடம் அவள் ஓர்விசேஷவேண்டுகோள் செய்யவிருந்தாள். அதாவது அப்படிப்பட்ட அதிகம்இளமையான ஓர் இளவயதிலே கார்மேல்மடத்தில் சேர்ந்துகொள்ள அவரின் அனுமதியை வேண்டினாள். பாப்பான வரும் லிசியேபதிச்சின்னத்தெரேசாவின் வேண்டுகோளை அருளினார். ஆயினும் ஓர்நாள் தமது பதிலாளிகளில்ஒருவர் அவளை "இக்கால மகாப்பெரிய அர்ச்சியசிட்டவள்"என்று அழைப்பாரென்பதைஅவர்முன்னதாகஅறிந்துகொள்ள முடியாதிருந்தார்.

தேவஅன்னையே இராணியாய்விளங்கியிருந்த ஓர்இல்லத்திலிருந்தே தெரேசாள் வரலானாள். அமலோற்பவநாயகியின் திருச்சுரூபம்ஒன்று அந்தஇல்லத்திலே மகிமைவாய்ந்த ஓர்சேத்திரஸ்தானத்தை வகித்திருந்தது. அதன்முன்பாகத் தெரேசாவின் தாய் தனது ஒன்பதுபிள்ளைகளில் ஒவ்வொருவரையுமே மரியன்னைக்கு அர்ப்பணஞ்செய்திருந்தாள். ஒவ்வோர்இரவும் குடும்பசெபங்கள் அதன்முன்பாகச் சொல்லப்பட்டுவந்தன. பிள்ளைகளில்நால்வர் ஞானஸ்நானத்திலே தாங்கள்அடைந்துகொண்ட ஆத்துமதாய்மையுடன் இருக்கும்போதே — குழந்தைகளாய்இருக்கும்போதே இறந்துபோனார்கள். ஏனையபிள்ளைகள்ஐவரும் தேவதாயாரின் கன்னிகாசபைகள்இரண்டிலே தேவனுக்குத் தங்களை அர்ப்பணஞ்செய்துகொண்டார்கள். கன்னிகாரத்தினங்களாகச் சிறந்துவிளங்கினார்கள்.

1958-ம் ஆண்டு கார்த்திகைமாதம்
யாழ்ப்பாண மேற்றிராசனப் பாடசாலைகளில் நடந்த
ஞானோபதேசப் போட்டிப் பரீட்சையின்
பேறுகள்

இல்லறத்தார் நடத்தும் பாடசாலைகள்

4-ம் வகுப்பு

1-ம் இடம்
ஒட்டகப்புலம் கத். பாடசாலை
கி. சே. மரியநாயகம்

2-ம் இடம்
கட்டைக்காடு கத். பாடசாலை
மி. மருசலீன்

மண்டைதீவு கத். பாடசாலை
சூ. மேரி றீற்ரூ

3-ம் இடம்
பாலைக்குளி கத். பாடசாலை
த. செபஸ்ரியாஞள்

4-ம் இடம்
பாலைக்குளி கத். பாடசாலை
ம. பொ. திரேசம்மா

5-ம் வகுப்பு

1-ம் இடம்
கட்டைக்காடு கத். பாடசாலை
யா. மேரி றோஸ்

2-ம் இடம்
முரசுமோட்டை கத். பாடசாலை
அ. அமிர்தநாதன்

3-ம் இடம்
கட்டைக்காடு கத். பாடசாலை
அ. ஸ்கொலஸ்ரிக்கா

4-ம் இடம்
அளவெட்டி கத். பாடசாலை
ச. அல்பிறெட்

6-ம் வகுப்பு

1-ம் இடம்
கலட்டி கத்தோலிக்க பாடசாலை
க. போல் சேவியர்
ஆ. ஆரோக்கியநாதர்

2-ம் இடம்
கட்டைக்காடு கத்தோலிக்க பாடசாலை
அ. கொன்ஸ்ரன்ரைன்

மண்டைதீவு கத்தோலிக்க பாடசாலை
மீ. அன்ரன் யேசுதாசன்

3-ம் இடம்
மண்டைதீவு கத்தோலிக்க பாடசாலை
ப. யேசுதாசர்

4-ம் இடம்
செம்பியன்பற்று கத். பாடசாலை
அ. செபமாலை

7-ம் வகுப்பு

1-ம் இடம்
வாழ்ப். சென்ஜேம்ஸ் ஆண்பாடசாலை
அ. யேசுதாசன்

2-ம் இடம்
தாளையடி கத்தோலிக்க பாடசாலை
ம. மரியமலர்

3-ம் இடம்
கலட்டி கத்தோலிக்க பாடசாலை
யா. சிமியோன்

4-ம் இடம்
மிருசுவில் கத்தோலிக்க பாடசாலை
ச. அந்தோனிப்பிள்ளை

8-ம் வகுப்பு

1-ம் இடம்
மண்டைதீவு கத். பாடசாலை
க. ரோசம்மா

2-ம் இடம்
இறம்பைக்குளம் கத். பாடசாலை
இ. தேவதாசன்

3-ம் இடம்
மண்டைதீவு கத். பாடசாலை
ம. ஆரோக்கியநாதர்

4-ம் இடம்
மண்டைதீவு கத். பாடசாலை
பி. மேரி தேவராணி

Pre. S. S. C. வகுப்பு

1-ம் இடம்
விடத்தற்தீவு கத்தோலிக்க பாடசாலை
ய. அங்கமுத்து

2-ம் இடம்
மாதகல் அர்ச். சூசையப்பர் பாடசாலை
நீ. பத்திநாதன்

3-ம் இடம்
அடம்பன் கத்தோலிக்க பாடசாலை
செ. ஜேம்ஸ் துரம்

துறவறத்தார் நடத்தும் பாடசாலைகள்

4-ம் வகுப்பு

1-ம் இடம்
மாதகல் சென் தோமஸ் கத். பாடசாலை
வ. ஜெயமங்கள நாயகி

2-ம் இடம்
மாதகல் சென் தோமஸ் கத். பாட.
சி. இசபெலா கருணை

3-ம் இடம்
பண்டத்தரிப்பு யசிந்தா கத். பாடசாலை
அ. லயன்ஸ் பாலசிங்கம்

4-ம் இடம்
யாழ்ப். திருக். கன்னியர்மடம்
அ. ஜெயசீலா

5-ம் வகுப்பு

1-ம் இடம்
பருத். சென் தோமஸ் கத். பாடசாலை
அ. அன்னமேரி

2-ம் இடம்
வங்காலை கிறீஸ்துராசா பாடசாலை
வோ. மறிஸ்ரெலா குலாஸ்

3-ம் இடம்
வங்காலை கிறீஸ்துராசா பாடசாலை
யோ. மரியபரமேல் குருஸ்

4-ம் இடம்
இளவாலை கன்னியர் தமிழ்மடம்
சூ. யசிந்தா

6-ம் வகுப்பு

1-ம் இடம்
யாழ். சென்யேம்ஸ் பெண்பாடசாலை
ஏ. திரேசம்மா

2-ம் இடம்
நாரந்தனை கத். பெண்பாடசாலை
ம. பெர்னதேத்

3-ம் இடம்
சில்லாலை சென்மேரீஸ் பாடசாலை
செ. மேரி மாகிறேற்

4-ம் இடம்
யாழ்ப். சென்யேம்ஸ் பெண்பாடசாலை
அ. மேரி அஞ்சலா

7-ம் வகுப்பு

1-ம் இடம்
யாழ்ப். திருக். கன்னியர் தமிழ்மடம்
இ. பேளி பற்றீசியா

2-ம் இடம்
மயிலிட்டி கத்தோலிக்க பாடசாலை
ஞா. பரமநாதன்

3-ம் இடம்
யாழ்ப். சென்யேம்ஸ் பெண்பாடசாலை
அ. விறிசித்தம்மா

4-ம் இடம்
கரம்பன் செப. பாடசாலை
ஜே. மேரி இமெல்டா

8-ம் வகுப்பு

1-ம் இடம்
மானிப்பாய் அர்ச். அன்னம்மாள் பாட.
அ. றெஜீனா

2-ம் இடம்
சில்லாலை சென்மேரீஸ் பெண்பாடசாலை
சு. விற்றுவார்

3-ம் இடம்
மானிப்பாய் அர்ச். அன்னம்மாள் பாட.
சி. திரேசா

4-ம் இடம்
சில்லாலை சென்மேரீஸ் பெண்பாடசாலை
ஆ. மேரி கிறேஸ்

Pre. S. S. C. வகுப்பு

1-ம் இடம்
மாதகல் சென்தோமஸ் பெண்பாடசாலை
ம. றெஜீனா

2-ம் இடம்
மாதகல் சென்தோமஸ் பெண்பாட.
சூ. ஜெயமேரி
சென்ஜேம்ஸ் பெண்பாடசாலை
சூ. பிரான்சிஸ்கா குலாஸ்

3-ம் இடம்
மாதகல் சென்தோமஸ் பெண்பாட.
பா. மேரி லூர்த்து

4-ம் இடம்
விடத்தற்தீவு கத்தோலிக்க பாடசாலை
எஸ். வி. ஜி. தேவதாசன்

4-ம் இடம்
யாழ்ப். திருக். கன்னியர்மடம்
அ. திரேசா

S. S. C. வகுப்பு

1-ம் இடம்
வற்றாப்பளை கத்தோலிக்க பாடசாலை
ம. அந்தோனிப்பிள்ளை

ஆனைக்கோட்டை கத். பாடசாலை
அ. மரியநாயகி

2-ம் இடம்
வங்காலை கத்தோலிக்க ஆண்பாடசாலை
ம. வென்ஸ்செஸ்லாஸ் பீரிஸ்

முருங்கன் கத்தோலிக்க பாடசாலை
சி. சவுந்தரநாயகம்

3-ம் இடம்
அடம்பன் கத்தோலிக்க பாடசாலை
செ. ஆரோக்கியம்

4-ம் இடம்
சென்யேம்ஸ் ஆண்பாடசாலை
சூ. சிலுவைராசா

1-ம் இடம்
நாரந்தனை கத். பெண்பாடசாலை
ச. மேரி மாகிறேற் அலிஸ்

2-ம் இடம்
சில்லாலை சென்மேரீஸ் பெண்பாடசாலை
பே. திரேசா புஷ்பம்

3-ம் இடம்
இளவாலை கன்னியர் தமிழ்மடம்
யோ மேரி மகிமைநாயகி

4-ம் இடம்
இளவாலை கன்னியர் தமிழ்மடம்
இ. மேரி மாகிறேற்

Philip Ponniah,
Gen. Manager, R. C. Schools

Jaffna, 24-8-58

சுதேச வர்த்தமானம்

சிறியதுறைமுகங்களின் அபிவிருத்தி

திரிகோணமலை, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, மூதூர், காலிஎனும் ஐந்துதுறைமுகங்களையும் திருத்திவளப் படுத்தும் வேலைகளுக்கு முக்கியத்துவங்கொடுக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. புதியதிவருடத்திலே இவற்றிற்கென்று 1கோடியே 10லட்சம்ரூபா செலவிடப்படவிருக்கிறது. இத்துறைமுகங்களுக்குக் கப்பல்போக்குவரத்து அதிகரித்துவருவதைமுன்னிட்டு வேலைகளைத் தாமதமின்றிநடத்தத் தேசியசேவைமந்திரி உத்தரவிட்டுள்ளார். காலிக்கு 75லட்சம்ரூபாவும், காங்கேசன்துறைக்கு 43லட்சத்து 50ஆயிரம்ரூபாவும், ஊர்காவற்றுறை, மூதூர்த்துறைமுகங்களுக்குப் 12லட்சத்து 40ஆயிரம்ரூபாவும் செலவிடப்படவிருக்கிறது. திரிகோணமலையில் இப்போதே நல்லவசதிகள்இருப்பதால் அங்கு அதிகபணம் செலவிடப்படமாட்டாது.

கண்டிப் பெரஹராயில் இராஜயானையின் அட்டகாசம்

சென்ற 19-ந்திகதியன்றிரவு நடைபெற்ற கண்டிப் பெரஹராயிலே கலந்துகொண்ட யானைகளில் மிகப்பெரியதான தலதாமாளிகையின் இராஜயானைக்கு மதம்பிடித்ததால் சனக்கூட்டத்தில்ஏற்பட்ட குழப்பம் காரணமாகப் 14பேர்இறந்தனர். 125 பேர் பலத்தகாயமடைந்தனர். 191பேர் சொற்பகாயங்களுடன் தப்பிக்கொண்டனர். இந்தயானை மதங்கொண்டு கண்டிவீதிகளிலுள்ள கடைகளைத் தாக்கியபோது பெரஹராயில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கானமக்கள் பீதிகொண்டு அலறியபடியே அங்குமிங்கும் ஓடியதால் பலர்மிதியுண்டும், நெரியுண்டும் கொல்லப்பட்டனர். காயமடைந்தனர். ஆனால், அந்தயானையால் மிதியுண்டு கொல்லப்பட்டவர்கள் ஒருபெண்ணும், ஒருகுழந்தையுமாத்திரமே. பொதுவிலே இறந்தவர்கள் 11பெண்களும், 2ஆண்களும், 1குழந்தையுமாவர். இறுதியாக இந்தயானை சுட்டுக்கொல்லப்பட்டது. ஓர்நெருப்புப் பந்தத்திலிருந்து விழுந்த தணலே இந்தயானைமிதித்ததே அது கோபங்கொள்ளக் காரணமாகும். சனக்கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்திலே காடையர்கள் வெளிகொண்டுநகைகள், பணம், பெண்கள்அணிந்திருந்த புடவைகள்ஆதியவற்றைக் களவாடினர்கள். நிற்க, பெரஹராயின் இறுதித்தினமாகிய 20-ந்திகதியன்றும் ஊர்வலத்தில் போய்க்கொண்டிருந்த ஒருயானை தற்செயலாகத் திடீரெனத் திரும்பியபோது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியஒருவர் ஒருபெண்ணின் கழுத்திலிருந்தமாலையைப் பறித்துக்கொண்டு ஓடினர், யானையென்று சப்தமிட்டாராம். உடனே கலவரம்உண்டாயிற்று, சனங்கள் விழுந்தடித்துக்கொண்டு ஓடியபோது 18பேர் காயமடைந்தார்கள்.

சித்தவைத்திய கல்லூரி

யாழ்ப்பாணத்திலே சித்தவைத்திய கல்லூரிஒன்றும், சித்தவைத்தியசாலை ஒன்றும் அமைக்கப்படும்விஷயமாய்த் தற்போது தீவிரமுயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அகில-இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்தியசங்கம் இது விஷயமாய்த் திட்டவட்டமான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. கொழும்புச் சுதேசவைத்திய கல்லூரியில் சித்தவைத்தியப்பகுதி காலக்தோறும் குன்றிக்கொண்டுவருவதும், அங்கு செல்லும் தமிழ்மாணவர்கள் தொகை குறைந்துகொண்டுவருவதும், பிறவுமே இம்முயற்சிக்குக் காரணமாகும். அதனால் சுகாதாரமந்திரி இம்மாதம் 31-ம்திகதி யாழ்ப்பாணத்துக்குவரும்போது இவ்விஷயமாய் அவரிடம்வற்புறுத்த அகில-இலங்கைச் சித்தஆயுள்வேத வைத்தியசங்கம் எண்ணியுள்ளது.

சைக்கிள்வீரரின் அரியசாதனை

இந்தியசைக்கிள்வீரரான திரு. எம். வலம்புரிஅவர்கள் யாழ்ப்பாணமுற்றவெளியிலே சென்ற 19-ந்திகதி புதன்கிழமைகாலை 9மணிமுதல் அடுத்தஞாயிற்றுக்கிழமைகாலை 9மணிவரை ஓர்சைக்கிளிலே கைபிடியின் பின்புறமாக அமர்ந்தவண்ணம் ஐந்துதினங்களாக— அதாவது 96மணித்தியாலம் தொடர்ந்து சவாரிசெய்து அரியதோர் சாதனையை நிலைநாட்டி வெற்றியீட்டி யாழ்ப்பாணமக்களின் பாராட்டுதலையும், சன்மானங்களையும் பெற்றுக்கொள்ளலாயினர். அவர் சைக்கிள்ஓட்டம்நடத்திய ஐந்துதினங்களிலும் யாழ்ப்பாணவீதிகளெல்லாம் தேர்த்திருவிழாவுக்குப்போன்று— இல்லை அதிலுமகூடுதலாகச் சனத்திரள்களாலே இரவும்பகலும் தேங்கியவண்ணமிருந்தன. அவரின் சைக்கிள்ஓட்டத்தை ஆரம்பித்துவைத்த யாழ்நகர்மேயர் திரு. அல்பிறெட் துரையப்பாஅவர்களே ஞாயிற்றுக்கிழமைகாலை முற்றவெளியில் சமூகத்திரம்போலத் தேங்கிநிருந்த மக்கள் சமுகத்திலே அதனைமுடிவுக்குக் கொண்டுவரலாயினர். திரு. வலம்புரி இந்தியாவில் நிலைநாட்டிய 101மணிநேரசாதனையை இங்கும் நிலைநாட்டமுயன்றும் மக்களின்கேள்விக்கு மதிப்புக்கொடுக்குமுகமாகத் 97மணிநேரச் சவாரியின்பின் சைக்கிளைவிட்டுக் கீழேஇறங்கினர். இவர் அடுத்தபுரட்டாசிமாத ஆரம்பத்தில் கொழும்பிலே சைக்கிள்ஓட்டம் நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது.

கார் தொழிலாளியான சூசையப்பர்

இங்கிலாந்திலே லூட்ரன்நகரில் நவமாகக் கட்டப்பெற்றுள்ள அர்ச். சூசையப்பர்கோவில் தனது முகப்புவாயில் கதவுக்குமேலாகத் தொழிலாழியான அர்ச். சூசையப்பரின் தொழில்சம்பந்தமான சுரூபவேலைப்பாடு ஒன்று அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதிலேஅவர் தச்சுத்தொழில் நடத்திய தமது பட்டறையின் நீண்டமர ஆசனத்தில் வேலைசெய்பவராக வர்ணிக்கப்படவில்லை. அதற்குப்பதில் கார் எஞ்ஜின்கள் பொருத்தும் சாலையிலே ஒருகரத்தில் புரி ஆணிபூட்டும் இரும்புச்சாவி ஒன்றையும், மறுகரத்தில் எஞ்ஜின் அச்சுக் குற்றிஒன்றையும் தாங்கியவராய்க் காட்சியளிக்கின்றார். ஓர் காலம் தனது தொப்பிகளையிட்டுப் பெயர்வகித் திருந்ததுபோல இன்று மோட்டர்கார்கள் செய்வதில் பெயர்படைத்துள்ள அப்பட்டினத்திலே இவ்வாறு அர்ச். சூசையப்பரின்தொழிலை மாற்றியமைக்கக் காரணமாயிருந்தவர் அப்பட்டினத்தின் பங்குக்குரவரான வண. ஆர்தர் புறுவர்சுவாமியாரே. இதையிட்டுஅவர் பெரிதும்மகிழ்ச்சியுற்றவராய்க் காணப்படுகின்றார். பங்குக்கிறீஸ்தவர்களும் அர்ச். சூசையப்பரை ஓர் கார்தொழிலாளி ஆக்கியதை ஆதரித்திருக்கிறார்கள். அப்பட்டினத்திலுள்ள மிகப்பாரிய மோட்டர்கார் தொழிற்சாலையில் வேலை கொள்ளப்படுகின்ற 20,000 தொழிலாளர்களில் அந்தவிசார ணைப்பங்கைச் சேர்ந்தவர்களில் அநேகரும் இருக்கின்றார்கள்.

"அவர் பாப்பாண்டவரோடு இருப்பார்"

ஓர்லாண்டோ பத்துப்பிள்ளைகளைத் தன்செல்வங்களாகக் கொண்ட ஓர்ஏழைக்கம்மியனின் ஒன்பதுவயதுப் புதல்வனுவன். பார்ஜேலேயைத் தனது பிறப்பிடமாகக்கொண்ட இப்பாலியன் துரதிர்ஷ்டவசமாகப் பிறக்கும்போதே தனது குண்டிக்காய்களில் நோய்கண்டிருந்தான். அவனது குண்டிக்காய்கட்கும், சிறுநீர்க் குழாய்க்கும் இடையே சிலமாறுபட்ட நரம்புகள் அமைந்திருந்தமையானது அவனுக்கு எப்போதுமே நீங்காத துன்பத்தை அளித்தது.

ஒருநாள் தனது வேதனையைப் பொறுக்கவாற்றாத சிறுவன் சமையலறைக்கு ஓடிச்சென்று தன்தாயை நோக்கி, "அம்மா! சின்னயேசு எங்கேயிருக்கிறார்?" என்று கேட்டான். தனது செல்வனின் வேதனை கண்டு மனஞ்சகிக்கவாற்றாத அந்த ஏழைத்தாய் "எனக்குத் தெரியாதப்பா; ஒருவேளை அவர் பாப்பாண்டவரோடு இருப்பார்" எனக் கூறினள். கள்ளங்கபடமற்றஅப்பாலியன் உடனே பாப்பரசருக்கு ஓர்கடிதம் வரைந்தான். "அன்பார்ந்த பரிசுத்த தந்தைக்கு, ரோமை"என விலாசமிடப்பட்டிருந்தது அக்கடிதம். அக்கடிதத்தில் வரையப்பட்டிருந்தவை: "அன்பார்ந்ததந்தையே! நான் குணமடைவதற்கு உதவி செய்யுங்கள்; சின்னயேசு உமக்குப் பக்கத்தில் இருப்பதாக ஒரு சின்னப்பையனை எனக்கு எனதுஅன்னை சொன்னாள்; மற்றப் பையன்களைப்போல நானும் ஆரோக்கியமுள்ளவனாய்ஓடியாடி விளையாட எனக்கு உதவிசெய்யும்படி சின்னயேசுவிடம் கேட்டுக்கொள்ளுங்கள்."

ஒருகொப்பித்தாளில் வரையப்பட்டிருந்த இந்த உருக்கமான கடிதம் பரிசுத்த தந்தையைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. அப்பையனைப்பற்றியமுழுவிபரத்தையும் தமக்குஅறிவிக்குப்படி பரிசுத்ததந்தை பார்ஜேலேபின் மேற்றிராணியாருக்குச் செய்தி அனுப்பினர். அப்பையனின் வியாதியைப்பற்றி அறிவித்த மேற்றிராணியார், சாதாரண வைத்தியர்களால் அவனைக் குணப்படுத்தமுடியவில்லையென்றும், நிபுணர்களின் உதவியுடன் உயர்ந்த சத்திரசிகிச்சை செய்வதற்கு இயலாத வறியநிலைமையில் அப்பையனின் பெற்றோர் இருக்கின்றார்களென்றும் தெரிவித்திருந்தார்.

பரிசுத்த பாப்பரசர் இவ்விஷயத்தைத் தம்முடைய பொறுப்பில் எடுத்தார். ஓர்லாண்டோ நேப்பிள்ஸ் நகரிலிருந்த ஒரு தனிப்பட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டான். இத்தாலியிலேயே சிறுநீர் சம்பந்தப்பட்ட ரோகங்களைக் குணமாக்குவதில் பெயர்பெற்ற இந்த வைத்தியசாலையைப் பிரபல வைத்திய நிபுணரான பேராசிரியர் மைக்கலாஞ்சலோ சொறன்ரினு என்பவர் நடத்திவருகின்றார். மிகப்பயங்கரமான ஒருசத்திரசிகிச்சைமூலம் பேராசிரியர்பையனின் உறுப்புகளில் மாறுபட்டிருந்தவற்றை அகற்றிவிட்டு, அவனது குண்டிக்காய்கட்கும், சிறுநீர்க் குழாய்க்கும் தொடர்பைஏற்படுத்தினர்.

தனது படுக்கையிலிருந்து எழுந்து உட்காரக்கூடியதான தும் ஓர்லாண்டோ என்ற அப்பாலியன் பாப்பரசருக்கு மீண்டும் ஓர்கடிதம்வரைந்தான். "பரிசுத்ததந்தையே! தாங்கள்சின்னயேசுவிடம் மன்றாடினீர்கள். அவர் உங்கள்மன்றாட்டைக்கேட்டருளினர். நான் இப்போது என்வயதுப் பையன்களைப்போல மகிழ்ச்சியோடிருக்கிறேன். சின்னயேசுவுக்கும், தங்களுக்கும் நன்றி"

பர்மாவும் கத்தோலிக்க மிஷனரிமாரும்

மனுமுறைக்குரிய தொண்டுகளில் ஈடுபடுவதற்கு ஓர்விசேஷ தொண்டுதலாகப்பிறதேசமிஷனரிமார்கள் யுத்தத்துக்குமுந்திய தங்கள்தொகையிலே பர்மாவில் அனுமதிக்கப்படவிருக்கின்றார்கள். "ஆண்மாக்களைக்கவனிப்பதுமகாவிசேஷப்பட்ட தொண்டுஎன்பதை நாம்ஒப்புக்கொள்கிறோம்; ஆனால், நோயாளரைக் குணப்படுத்துவதும், அசக்தர்களையும், இளைஞர்களையும் பரிபாலிப்பதும்அலட்சியஞ்செய்யப்படமுடியாது" என தெரிவித்து அரசாங்கத்தின் கொள்கை "விவேகமும், உதாரமும்" ஆனதென்று "காடியன்" என்ற நங்கூன் தினசரிப் பத்திரிகை எடுத்துக் கூறியிருக்கின்றது. பர்மாவிலே தற்போது குருமாரும், சந்நியாசரும், கன்னியாஸ்திரிமாருமாக 500 கத்தோலிக்கமிஷனரிமார் இருந்துவருகின்றனர். யுத்தத்தின்முன் 580 பேர் இருந்துவந்தார்கள்.

கத்தோலிக்கரான கவர்னர் - ஜெனறல்

கனடாதேசத்தின் புதியகவர்னர்-ஜெனறலாக மேஜர்-ஜெனறல் ஜோர்ஜ் வனியர் என்ற கத்தோலிகபிரமுகர் எலிசபேத் மகாராணியாராலே நியமனம் செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் கனடாதேச மொன்றியல் நகரிலே பிறந்து, அங்குள்ள லொயலாக் கல்லூரியிலும், குவெபெக்நகரிலுள்ள லவால்சர்வகலாசாலையிலும் கல்விபயின்றவர். பிரான்ஸிய-ஐரிஷ் தாய்தந்தையரின் வழித்தோன்றலான இவருக்கு நான்குபுதல்வர்களும், ஓர் புதல்வியும் இருக்கின்றார்கள். மூத்தபுதல்வரான வண. ஜோர்ஜ் வனியர்சுவாமியார் குவெபெகநகரைச்சேர்ந்த ஒகாஎனுமிடத்திலுள்ள சிஸ்ரோஷியன்சபைக் குரவராவர். இராணுவசேவையிலும், இராசீயசேவையிலும் அதிகம்பிரஸ்தாபம்பெற்ற புதியகவர்னர்-ஜெனறல் தற்போது 75வயதடைய ஓர்பரிஸ்தராவர். முதலாவது உலகயுத்தத்தில்காயமடைந்து, டி. எஸ். சி, எம் சி. எனும் மகிமைவரிசைகள் சம்மானிக்கப் பெற்றவர்.

இந்தியகத்தோலிக்கஆஸ்பத்திரிகள்

இந்தியாவிலே தற்போது 508 கத்தோலிக்க ஆஸ்பத்திரிகளும், மருந்துச்சாலைகளும் நோயாளரைப் பரிகரிக்கும் வைத்திய தொண்டில்ஈடுபட்டிருக்கின்றன. இவைகளிலே வருடம்ஒன்றுக்கு லட்சக்கணக்கானமக்கள் வைத்தியசிகிச்சை பெற்றுவருகின்றார்கள். 508 ஆஸ்பத்திரிகள், மருந்துச்சாலைகளிலும் பூரணமாக அமைந்துள்ள ஆஸ்பத்திரிகள் 164. இவற்றிலே பிரசவஆஸ்பத்திரிகள், தொழுநோய், சயரோக ஆஸ்பத்திரிகள், குஷ்டரோகர் சாலைகள், பொதுஆஸ்பத்திரிகள் ஆதியனஅடங்கும். இந்தியாவின் ஏறக்குறைய எல்லாமேற்றிராசனங்களுமே ஆஸ்பத்திரிகளைக் கொண்டிருக்கின்றன. 344கத்தோலிக்க மருந்துச்சாலைகளும் தேசமுழுவதுமே பரந்திருக்கின்றன. ஆனால், இவற்றில் அதிகமானவைகள் வடபகுதியிலேயே இருந்துவருகின்றன. கத்தோலிக்கருடையனஅல்லாத அரசாங்க ஆஸ்பத்திரிகள், நகரசபை ஆஸ்பத்திரிகள், தனிப்பட்ட ஆஸ்பத்திரிகளிலும் கத்தோலிக்க கன்னியாஸ்திரிமார் தொண்டாற்றிவருகின்றார்கள்.

யாத்திரிகர்களின் வேண்டுகோள்

ஸ்பானிய உள்நாட்டுயுத்தத்திலே தங்கள் வேதத்துக்காகப் பிராணனைத்தியாகஞ்செய்த இருமேற்றிராணிமாருகும், பன்நூற்றுக்கணக்கான குருப்பிரசாதிகள், சந்நியாசர், கன்னிகாஸ்திரிமாருக்கும், சாதாரண கத்தோலிக்கருக்கும் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுதற்கான மனுஒன்றைச் சமீபத்திலே ரறகோலுகரின் அதிமேற்றிராணியாரான கருதினல் அறிபாஆண்டவரின் தலைமையில் ரோமாபுரிசென்றிருந்த ஸ்பானியயாத்திரிகர்கள் பரிசுத்தபாப்பரசரிடம் சமர்ப்பித்தார்கள். பாப்பரசர் ஸ்பானியபாஷையில் பேசியபோது: தமது தெய்வீகஸ்தாபகரின் திருஉதிரத்தாலும், கிறீஸ்தவர்களின்அன்பாலும்,உதாரத்துவத்தாலும், தபசினாலும், சிலுவையைச்சுமந்துசெல்லும்வாழ்க்கையினாலும், கிறீஸ்தவனுக்குரிய நடையாலும் கட்டியெழுப்பப்பெற்ற திருச்சபைச் சரித்திரத்தின் ஏறக்குறைய ஒவ்வோர் சகாப்தத்திலும் ஒருவர் தனது உதிரத்தால் கிறீஸ்துநாதருக்குச் சாட்சியாவது ஓர் தினந்தசம்பவமாய் இருக்கவேண்டுமெனக்கூறிகின்றார்.

குடும்பசெபமாலைப் படமாளிகை

குடும்பசெபமாலையின் பிரபலஞானத்தளகர்த்தரான வண. பற்றிக் பெய்ற்றன் சுவாமியார் தென்னமெரிக்க மேற்றிராசனங்களிலே தமதுகுடும்பசெபமாலைப் படையணியைச் சமீபத்திலே தொடக்கும்போது, செபமாலை இரகசியங்களைப்பற்றிய தமது சினிமாப்படங்களைமாத்திரமல்ல, இடம்பெயரும் தமது சினிமாப் படமாளிகையையும் தம்முடன் கொண்டுசெல்வார். ஐக்கியஅமெரிக்க தேசத்திலுள்ள சாதாரண கத்தோலிக்கரின் குழுஒன்று அதற்குத்தேவைப்படும் ஜீப்ஒன்றையும், திரைஒன்றையும், பிற சாதனங்களையும் அவருக்கு உதவியிருக்கின்றது. வண. பெய்ற்றன் சுவாமியாரின் செபமாலைச் சினிமாப்படங்கள் பெல்ஜியதேச பிறசெல்ஸ்நகரில் நிகழ்ந்த உலகபொருட்காட்சியிலே பெரிதும் அனுகூலம்பெற்றுள்ளது. அதிலே இரண்டரைலட்சம்மக்கள் அவைகளைப்பார்த்திருக்கின்றார்கள். பெல்ஜியத்தில் அவர்நடத்திய செபமாலைப்படையணியாலே கத்தோலிக்கர் அல்லாதஒருதொகையாளரும் செபமாலைசொல்லிவருவதாக வாக்களித்திருக்கின்றனர்.

புரட்டாசி மாதம்

பொதுக்கருத்து: கிறீஸ்தவகுடும்பங்களில் திருச்சபைக்காக உழைக்கும் உணர்ச்சி செழித்தோங்கும்படியாக வேண்டிக் கொள்வது.

வேதபோதகக்கருத்து: தென்ஆபிரிக்க சாதிபேதச்சச்சரவு கிறீஸ்தவகொள்கைக்கொப்ப ஒதுக்கப்பட வேண்டுமென மன்றாடிக்கொள்வது.

* * *

காலை ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இமமாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

சத்திய வேத
பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
ஆவணிமாதம் 27-ந் திகதி

சந்நியாச தங்கயூபிலி.

அன்று யேசுபாலனைத் தரிசிக்குமாறு கீழ்த்திசையிலிருந்து பரிவாரங்கள்புடைசூழ முடிமன்னர்கள்மூவர் பெத்லகேம் திருக்கெபியைநாடிச்சென்றதுபோல—யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே காலங்கண்ட குருமுனிவர்களும், மக்களின் பெருங்கண்ணியத்துக் குரியவர்களும், தங்கள் புனிதவாழ்க்கையாலே துறவறசிவியத்திற்கு ஓர் அணிகலம், போலத் திகழ்பவர்களுமான அதிவண. எஸ். இம்மனுவேல், வண. பி. நிக்கலஸ், வண. பி. ஏ. தோமஸ் குருப்பிரசாதிகள்மூவர் தங்களது சந்நியாச தங்கயூபிலி விழாவைக் கொண்டாடுமுகமாகத்தனித்தனியே குருமார்குழுக்கள்புடைசூழச் சென்ற25-ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை 7-30 மணிக்கு மேற்றிராசனமாளிகையிலிருந்து பரிசுத்தகொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலை நாடிச்சென்ற மனோகரகாட்சியானது எவர்மனதையுமே கவரவல்லமாட்சியுடைத்தாயிருந்தது. ஆசனக்கோவிலை அடைந்ததும் அவர்கள்மூவரும் பலிபீடஸ்தானத்திலே மும்மணிகள்போன்று தங்கள் சகோதரகுருப்பிரசாதிகளிடையே அமர்ந்திருக்க, தூரமும் சமீபமுமான இடங்களிலிருந்து வந்துகூடிய சுற்றத்தவர்களும், அன்பர்களும், மற்றும் ஞானமக்களுமாகத் திரளானோர் சமுகந்தந்திருக்க, அதிவண. ஜே. புரோஹான்சுவாமியவர்கள் குருபாடகர்களின்துணையோடு பெரியபாடற்பூசை நிறைவேற்றினர்.

சுவிசேஷமுடிவிலே குருமாரின் ஞானவொடுக்க போதகரான வண. ஏ. தர்மரத்ன சுவாமிகள் உள்ளமுருக, உணர்ச்சிததும்ப, சொன்னயம், பொருணயம் நிரம்பச் செய்தருளிய அருமையான பிரசங்கத்திலே, யூபிலிநாயகர்கள்மூவரும்அமலோற்பவமரியநாயகி குருபரித்தியாகிகள்சபையிலேவாக்குத்தத்தம்கொடுத்துச் சந்நியாசம்பூண்ட ஐம்பதாம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுகின்ற இச்சுபசந்தர்ப்பத்திலே, கடந்தஅரைநூற்றாண்டிலும் சர்வேசுரன் அவர்கள் மேல் பொழிந்தருளிய சகலவரப் பிரசாதங்களுக்கும், ஆசீர்வாதங்களுக்குமாக அவர்களுடன் ஒன்றுசேர்ந்து அவருக்கு நன்றி கூறவே அனைவரும்ஆங்கு சமூகமளித்திருப்பதை முந்தஞாபகத்தில் கொண்டுவந்தார்.

அதன்மேல் யூபிலிநாயகரான அதிவண. இம்மனுவேல்சுவாமிகளைப்பற்றி அவர் குறிப்பிட்டபோது: சுவாமியவர்கள்தமதுசாந்தமானபோக்காலும், தாழ்மையானவாழ்க்கையாலும் ஆண்டவரின் திருஇருதயத்தை நமதுகண்முன்பாகக்காண்பிக்கும் பளிங்குபோல்விளங்கிவருகிறார்; தமது மறைந்த அப்போஸ்தலிக்கசியத்தினால் எல்லோராலும் நேசிக்கப்பட்டு, சங்கிக்கப்பெற்று ஆண்டவருடைய திருஇருதயஇரக்கத்தின்சின்னமாய் இலங்குகின்றார்; மறைந்தசியமாய் இருந்தபோதிலும் அவர் தமதுபுண்ணிய சியத்தின்நறுமணத்தைஎங்கணும்பரிமளிக்கச்செய்துகொண்டிருக்கிறார்; ஆன்மவாஞ்சையினால் தூண்டப்பெற்றுத் தள்ளாப்பிராயமாய் இருந்தபோதிலும், நோய்வாய்ப்பட்டபோதிலும் அணுவத்தனைசகபலம்இருக்கிறவரை—கடைசிமூச்சுவரை ஆண்டவருக்குத் தொண்டுசெய்யவேண்டுமென்ற ஆவல்கொண்டிருக்கிறாரெனக் கூறினார்.

பின்னர்யூபிலிநாயகரான வண. நிக்கலஸ்சுவாமிகளைப்பற்றிக் குறிப்பிட்டபோது: அவர் பவுல் அப்போஸ்தலரைப்போன்று விடாப்பிடியாகத் தொண்டாற்றும் அப்போஸ்தலர்; பவுல் அப்போஸ்தலரைப்போல அவர் மலைபோன்று எதிர்கொண்டு வரும் எவ்விதகஷ்டநஷ்டங்களையும்தலைகொடுத்துத்திடமுடன்மேற்கொண்டு செயலாற்றும் தீரம் வாய்ந்தவர்; அவர்கல்வித்துறையிலே ஆற்றியுள்ள சேவைகள் பாராட்டத்தக்கன; தமதுபிரசங்கங்களாலே எவரெவர் உள்ளங்களையும் ஈர்ந்துகொள்ளும் ஆற்றல்வாய்ந்தவர். அவர் முதுமைகண்டும் இளமைபெயர்ந்தவர்போல் சுகபலதிடதேகியாய் இன்னுமே ஊக்கமாக அப்போஸ்தலிக்கதொண்டு ஆற்றிவருகின்றாரெனக் கூறலாயினர்.

ஈற்றில், வண. தோமஸ்சுவாமிகளைப்பற்றிப் பேசியபோது: அவர் மரியாயின் செவாலியர்—அதாவது பரிமேலர், அவரின் சாங்கோபாங்க சியத்திலே மரியாயிக்குத் தோத்திரமாகத் தோலகட்டிச் செபமாலைத்தாசர் ஆச்சிரமமென்று பிரஸ்தாபமாக இன்றுஅறியப்படுகின்ற அருமையான ஏகாந்த துறவறசபை மலர்ந்தது; கீழ்த்திசையில் முதலாவது துறவறஆச்சிரமவாழ்க்கையை ஆரம்பித்தபெருமை அவருக்கேஉரியது; இலங்கையிலும், இந்தியாவிலும் இன்று பல்லாயிரக்கணக்கான பிரியதத்தமந்திரங்கள் தினமும்பரலோகத்தைநாடிப்பறந்து மாதாவின்பாதபங்கையத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றன; அவர் மரியாயின் அப்போஸ்தலர்; அவரது சாங்கோபாங்கசியமும், அவருடையசிரியதொண்டுகளும் அமலோற்பவமரியநாயகி குருபரித்தியாகிகள்சபைக்கு இடையறாது சுடரொளிவீசிக்கொண்டிருக்கின்றனஎனக் கூறிமுடித்து யூபிலிநாயகர்களுக்குச் சோபனவாழ்த்துக் கூறினார்.

திவ்விய பூசைமுடிவிலே வண. பி. ஏ. ஜோண்சுவாமியவர்களால் தேவநற்கருணை எழுந்தேற்றஞ் செய்து வைக்கப்படவே, யூபிலிநாயகர்கள்மூவரும் முறையே சென்று சற்பிரசாதநாதர் திருச்சந்நிதியில், வண. ஜோண்சுவாமியவர்கள் முன்னிலையில் தங்கள்சந்நியாசவாக்குத்தத்தத்தைப் புதுப்பித்தனர். அதன்மேல் வருடாந்தஞானவொடுக்கத்தில் கலந்துகொண்டகுருமார் அனைவரும் தங்கள்வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்தனர். "பின்னர்தெதேயும்"என்னும் தேவதோத்திரகீதம்பாடித் தேவநற்கருணைஆசீர்வாதம் அருளப்பட்டபின் யூபிலிநாயகர்கள்மூவரும் தங்கள்ஆசீர்வாதம் அருளினார்கள். அதன்மேல் விழாவிற்குச் சமுகமளித்தகுருப்பிரசாதிகள் புடைசூழத் தேவதோத்திரகீதங்கள் பாடிக்கொண்டு ஊர்வலமாக மேற்றிராசனமாளிகையை அடைந்து சகோதரகுருப்பிரசாதிகளின் சோபனவாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

யூபிலிநாயகர்கள் வாழ்க! அவர்கள் இன்னுமே பல்லாண்டுசுகத்துடனும், ஆயுசுபலத்துடனும் சீவித்திருந்து தங்கள் திருத்தொண்டுகளைத் தொடர்ந்து ஆற்றிவர எல்லாம்வல்ல இறைவன் திருவருள்பாலிப்பாராக!

சுதேச வர்த்தமானம்

—:—

ஊர்காவற்றுறையும் குடிதண்ணீரும்

ஊர்காவற்றுறைப் பட்டினசபைப் பகுதியிலே குடிதண்ணீர்க்கஷ்டம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டுவருகிறது; அதனால் இத்தக்கஷ்டத்தை நீக்கும்பொருட்டு லொறிமூலம் மேலதிகமாகக் குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்றும், அதற்குத்தேவைப்படும் நிதியை உடனடியாக ஒதுக்கவேண்டுமென்றும்கேட்டு ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் தலதாபனமந்திரிக்கு சென்றவாரம் அவசரத்தந்திஒன்று அனுப்பிவைத்துள்ளார். ஊர்காவற்றுறைப் பட்டினசபைப்பகுதியிலே தற்போது குழாய்மூலம் கொடுபடும்குடிதண்ணீர் போதாதிருப்பதும், மக்களுக்குத்தேவையானஅளவு குடிதண்ணீர் பெறமுடியாதிருப்பதுமே லொறிமூலம் கொடுபடவேண்டிய அவசியம்ஏற்பட்டுள்ளது.

வவுனியாவும் மலைநாட்டுத்தமிழரும்

மலைநாட்டில்வசித்திருந்த இந்தியகுடும்பங்கள்பல தற்போது வவுனியாப்பகுதியில்வந்து குடியேறிவருகின்றன. அதனால் காடாகவிருந்த இடங்கள்பலதிருத்தமடைகின்றன. அங்கே இந்தியர்குடியேறுவதால் வவுனியாப்பகுதி வருங்காலத்தில் சிறப்படையும். அங்கு காணிகளின்விலையும் தற்போது ஏற்றமடைந்துவருகிறது. இதற்குக்காரணம் இந்தியதமிழர் மலைநாட்டுப்பகுதியைவிட்டு அங்குகுடியேறி வசிப்பதேயாகும்.

சுகாதாரமந்திரி வருகின்றார்

யாழ்ப்பாண அரசினர்பெரியஆஸ்பத்திரியின் நிர்வாகம்சம்பந்தமாய்ப் பொதுசனங்கள்செய்துவரும் புகார்களை விசாரணைசெய்வதற்கும், ஆஸ்பத்திரியின் நிலைமைகளை நேர்முகமாகப் பார்வையிடுவதற்குமாகச் சுகாதாரமந்திரி இம்மாதக்கடைசியிலே யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யவிருப்பதாக நகரசபையின் மாதாந்தகூட்டத்தில் மேயர் தெரிவித்திருக்கின்றார். ஆஸ்பத்திரியின் நிர்வாகமுறைகள் அக்கூட்டத்திலே பலமாகக் கண்டிக்கப்படலாயின. ஆஸ்பத்திரியில் ஊழல்கள் மலிந்துவிட்டதாக அங்கு சிகிச்சைபெறச்செல்லும் நோயாளர்கள் புகார்செய்ததாக அதிலே தெரிவிக்கப்படலாயிற்று.

தமிழ்ப்புலவருக்குப் பொன்னாடை

முசலிக்காரியாதிகாரியின் பிரிவில் அடங்கிய முள்ளிக்குளக் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ப்புலவர் திரு. அ. கபிரியேற்பிள்ளை அவர்களின் 75-வது வயதுப் பூர்த்திவிழாவையிட்டுச் சென்ற 20-ந்திகதியன்று முள்ளிக்குளக்கிராமத்தில் கடைபெற்றவைபவமொன்றிலே அக்கிராமவாசிகள் இந்தமூதறிஞரைப் பொன்னாடைபோர்த்திக் கௌரவித்திருக்கின்றார்கள்.

யாழ்நகரும் மின்சாரதேவையும்

யாழ்ப்பாணநகரசபைக்குத் தேவைப்படும் மின்சாரமுழுவதையும் கொடுக்கும்விஷயமாய் இரண்டாவதுமின்சார உற்பத்தி யந்திரத்தை யாழ்ப்பாணநகரசபைக்குக் கொடுத்ததுவதுபற்றி யாழ்ப்பாணமேயருடன் தான் சம்பாஷனை நடத்தியதாகவும், நகரசபையும், அரசாங்கமும் ஒப்புக்கொள்ளக்கூடியவகையிலே உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருப்பதாகவும் போக்குவரத்து—மின்சாரமந்திரி திரு. மைத்திரிபாலா சேனநாயக்கா சனப்பிரதிகள்சபையில் தெரிவித்திருக்கின்றார்.

கள்ள ஐம்பதுரூபாநோட்டு அச்சு

சமீபகாலமுதல் கள்ளரூபாநோட்டுகள்கண்டறியப்பட்டதைத்தொடர்ந்து ஐம்பதுரூபாநோட்டு, தற்காலிகவாசபோர்மிற், எஸ். எஸ். சி. தராதரப்பத்திரம், மோட்டர்சாரதிகளுக்கான லைசென்ஸ் ஆகியவற்றைக் கள்ளத்தனமாக அச்சடிக்க உபயோகிக்கப்பட்டுவந்த அச்சுகள் சென்றசனிக்கிழமை இரவு பல்லேவலையிலுள்ள ஓர் அச்சகத்தில் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றுடன் அங்கிருந்த பலகள்ளஐம்பதுரூபாநோட்டுகளும், கள்ளத்தனமான எஸ். எஸ். சி. தராதரப்பத்திரங்களும், மோட்டர்சாரதங்களின் றெஜிஸ்தருடைய கள்ளக் கையெழுத்தைக்கொண்ட றப்பர்ஸ்ராம்புகளும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. அச்சகத்தின் சொந்தக்காரரான வி. அபயதீராவையும், அவரின்உதவியாளர் இருவரையும் பொலிசர் அழைத்துச்சென்றனர். அச்சகம்சீல்வைக்கப்பட்டுள்ளது. அச்சகமும் பொலிசாரால் காவல்செய்யப்படுகின்றது.

கலவரகாலக் கப்பற்செலவு

சென்றவருடம் வைகாசி-ஆனிமாதங்களில் நடைபெற்ற வகுப்புக்கலவரங்களின்போது அவசரகாலநிலைமை பிரகடனஞ் செய்யப்பட்டகாலத்திலே அகதிகளைக் கப்பல்கள்மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் கொண்டுசெல்ல ஏற்பட்டசெலவு 5,58,000 ரூபாவாகும். இதிலே பதினெட்டுக்கப்பல்கள் ஈடுபட்டிருந்தன. இந்தக்கப்பல்களுக்கு இவ்வளவுபணமும் கொடுக்கப்பட வேண்டுமென அரசாங்கத்தின்பேரால் துறைமுகக்கமிஷனர் கணக்கிட்டிருக்கிறார்.

அங்கும் இங்கும்

துக்ககரமான ஒருகாரியம்

"இந்நாட்டிலுள்ள மார்க்ஸியவாதிகளிடம் காணப்படுகின்ற துக்ககரமான ஓர்காரியம் என்னவென்றால் அவர்கள் மஸ்கோ, பீக்கிங், பெல்கிரேட் முதலாம் தூரமான இடங்களிலே தங்களுடைய தலைவர்களையும், மதிப்பையும் வைத்துக்கொண்டிருப்பதாகும். அந்நாடுகளுக்கு இவர்கள் யாத்திரை செய்து, எம்மாதிரியாகத் தங்களது அந்நிய ஆட்சியாளருக்கு ஏற்றவகையில் இந்தநாட்டை உருவாக்குவதென்ற அவர்களின் உத்தரவுகளைப் பெற்றுக் கொண்டு திரும்புகிறார்கள்."

திரு. ஆர். பிரேமதாசா,
முன்னாள் கொழும்பு உதவிமேயர்

1,500 பேர் மாண்டார்கள்

"வகுப்புவேற்றுமையின் விளைவாக ஒன்றுமறியாத அப்பாவிகளான சுமார் 1,500 பேர் மாண்டார்கள். இதுபோலத்தான் அரசாங்கம் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கிறது. தற்போதைய அரசாங்க எம். பி. கள் பொலிசார் அல்லது இராணுவத்தினரின் உதவியின்றித் தங்கள் தொகுதிகளுக்குச் செல்லமுடியாது. தனது பதவிகாலம் முடியும்வரைக்கும் பிரதமர் அதிகாரத்தில் இருப்பாராஞல் அவர் ஒரு கொண்டியாவர். ஐந்து லட்சத்துக் கதிகமானோர் வேலையில்லாதிருக்கும் தற்போதைய நிலையில் திரு. பண்டாரநாயகாவினுல் நாட்டை ஆள முடியாது."

டக்டர் என். எம். பெரேரு,
எதிர்க்கட்சித் தலைவர்.

உறுதிமொழிகள் எங்கே?

"சிங்களஸ்ரீ பொறித்த இலக்கத் தகட்டுப் பஸ்களை வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பியபொழுது திரு. மைத்திரிபாலா சேனநாயகா தனது உத்தேசத்தை முதலிலே வெளியிட்டார். தமிழ்ப்பேசும்மக்கள் தங்களால்இயன்ற எதிர்ப்பைக் காட்டட்டும் பார்ப்போமெனச் சவால்விட்டார். இப்போது திரு. எஸ். ஜே. டி. எஸ். சனவிரத்ன என்பவரும் அவர்முறையில் நடக்கின்றார். பிரதேச சுயாட்சி பற்றித் திரு. பண்டாரநாயக்கா திரும்பத்திரும்ப உறுதிமொழிகள் கூறினாரே. இந்த உறுதிமொழிகள் எங்கே? தமிழ்ப் பிரதேசத்தில் நியாயமான அளவு தமிழ் உபயோகம் என்னும் வாக்குறுதிதந்தாரே. இந்தவாக்குறுதி எங்கே? திரு. சனவிரத்னவின் புதிய யோசனை எப்படி வந்தது? இதைத் தமிழ்மக்கள் அறிய விரும்புகிறார்கள்."

திரு. எஸ். எச். பேரின்பநாயகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர்

எச்சரிக்கை செய்கின்றார்

"சென்றஆண்டு வைகாசிமாதத்தில் சிங்களவருக்கும், தமிழருக்குமிடையே வகுப்புக் கலவரம் உண்டாக்கப்பட்டு அதனால் ஏற்பட்ட விபரீதத்தை நாம் பார்த்தோம். இப்பொழுது சமயவேற்றுமை கிளப்பப்படுகிறது. இது மிகவும் மோசமான விளைவை உண்டுபண்ணும். சிங்களவரும், சிங்களவரும் அடிபட்டுச்சாக இதுவழிவகுக்குமென்று எச்சரிக்கைசெய்ய விரும்புகிறேன். வெலிமடை எம். பி. திருமதி இராஜரத்ன அடிக்கடி கத்தோலிக்க சமயத்தை இழுத்துப்பேசுவது எனக்கு அதிகம் மனவேதனையை அளிக்கின்றது. வெலிமடை எம். பி. கூறிய குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும்படி சவால்விட நான் தயாராயிருக்கிறேன். இதுபோன்ற சமய பேதங்களை உருவாக்கக்கூடிய பேச்சுகளுக்கு — சிறப்பாகக் கத்தோலிக்க சமயசம்பந்தமான பேச்சுகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளிவைக்கவேண்டும்."

திரு. வி. ஏ. அழகக்கோன்,
மன்னார் எம். பி.

தமிழர் பிரதேசமும் குடியேற்றமும்

"இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கெனச் சொந்தப் பிரதேசம் இருக்கவேண்டியது அவசியம். அரசாங்கத்தின் குடியேற்றதிட்டக் கொள்கை இந்தஉரிமைக்கு உலைவைக்கக்கூடிய தாய் இருக்கிறது. மொழிச் சமத்துவத்துக்காகப் பாடுபடுவதையிட்டுச் சமசமாஜக்கட்சிக்குநன்றிகூறக் கடமைப்பட்டிருந்தபோதிலும் குடியேற்றதிட்ட விஷயமாய் அக்கட்சியின் போக்கு மாறுபட்டதாய் இருக்கின்றது. முப்பதினுபிரம் பேர்களுக்குப் பாராளுமன்றத்தில் ஒருபிரதிநிதித்துவம் இருக்கவேண்டுமென்றுகூறிய சமசமாஜகட்சி பதினைந்தரைலட்சம் இலங்கை–இந்திய மக்களைப்பற்றி ஏன் சிந்திக்கவில்லை?"

திரு. சி. வன்னியசிங்கம்,
கோப்பாய் எம். பி.

தமிழரும் முதலீடுகளும்

"வருங்கால நலனை உத்தேசித்துத் தமிழ்ப்பேசும்மக்கள் அரசாங்கஸ்தாபனங்களில் போட்டிருக்கும் முதலீடுகளையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொள்வது நல்லது. இப்போது பொருளாதார நெருக்கடியினுல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் அரசாங்கத்துக்குத் தமிழர்கள் தங்கள் முதலீடுகளையெல்லாம் திருப்பிஎடுத்துக்கொள்வதால் பெரும் இக்கட்டான நிலைமை ஏற்படும். அதுமட்டுமல்ல, தென்னிலங்கையிலே தங்கள்பணத்தை முடக்கிவைத்திருக்கும் தமிழர்களும் அப்பணத்தைக் கொண்டுவந்து வடக்கு – கிழக்கு மாகாணங்களிலே தொழில் துறைகளில் பயன்படுத்துவது அத்தியாவசியமாகும்."

திரு. சி. வன்னியசிங்கம்,
கோப்பாய், எம். பி.

கல்விமந்திரியின் நோக்கம்

"கொழும்புத் துறைமுகம்போன்று இந்நாட்டின் கல்வி அமைப்பு இருப்பதை நான் விரும்பமாட்டேன். இளம் சந்ததியினர் நாட்டுக்குப் பிரயோசனமுள்ள நல்ல பிரசைகளாய், நல்லொழுக்கமுள்ளவர்களாய் வளர்வதற்கு வேண்டிய கல்விவசதிகளை அளிப்பதே எனது நோக்கம். கொழும்புத் துறைமுகத்தில் காணப்படும் ஒழுங்கீனம் நாட்டின் நற்பெயருக்குக் களங்கத்தை உண்டுபண்ணிவிட்டது. இந்த அரசாங்கம் வீழ்ச்சியடைந்துவிடுமென்று அதிகாரத்தைக் கைப்பற்ற முயலும் ஆட்கள் எத்தனையோதடவை ஹேஷ்யங்கள் கூறியிருக்கிறார்கள். ஆனல், இந்தஅரசாங்கம் தனது பதவிகாலம் வரை நீடித்திருக்கும்."

திரு. டபிள்யு. தஹநாயகா,
கல்விமந்திரி.

இளம்கமக்காரருக்கு வேண்டுகோள்

"கமத்தொழிலிலும், கைத்தொழிலிலுமுள்ள கௌரவத்தைத் தமிழர் சமுதாயம் இன்னும் உணராமலிருப்பது வெட்கப்படக்கூடிய ஓர் விஷயமாகும். இந்த மனப்பான்மை எமது பெற்றார்களிடமும், இளம்பெண்மணிகளிடமுமே அதிகம் குடிகொண்டுள்ளது. ஆகவே, எமது பெற்றார்களுக்கும், சகோதரிகளுக்கும் நான் கூறிக்கொள்வது யாதெனில், தமிழன் பண்பாட்டின்படி கமத்தொழிலிலும், கைத்தொழிலிலும்தான் கௌரவம் இருக்கின்றது; எனவே, உங்கள் இருதயங்களிலுள்ள தப்பானமனப்பான்மையை அகற்றி வருங்காலத்தில் விவசாயிகளுக்கே உங்களது வாழ்க்கையில் பங்கு உண்டென்றுகூற முன்வர வேண்டும். வடமாகாணத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்நிலம் காடுபோலக் காட்சியளிப்பதை நாம் எமதுகண்களினுல் பார்த்துக்கொண்டு சும்மாவிருக்கும்போது எமது பொருளாதாரம் எப்படி மேம்பட முடியும்? ஆகவே, இளம் கமக்காரரே! வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்குச் செல்லுங்கள். அவ்விடங்களில் குடியேறி எமது பொருளாதாரத்தையும், தமிழர் சமுதாயத்தையும் காப்பாற்றுங்கள்."

திரு. வி. என். நவரத்தினம்,
சாவகச்சேரி எம். பி.

ஜனநாயகமற்ற செயல்

"தமிழ்ப்பேசும்மக்கள் வாழுகின்ற பிரதேசங்களாகிய வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள கச்சேரிகளுக்குச் சிங்களக் கிளாக்குமாரை அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது ஜனநாயகமற்ற — குறிக்கோளற்ற ஒரு செயலாகும். தமிழ்ப்பேசும் மக்களை அவமானப்படுத்தவும், ஆத்திரமூட்டவும்மாத்திரம் இந்தநடவடிக்கை உதவுமென்பது வெளிப்படை. ஆட்சி நடத்துபவர்கள் ஆளப்படுவோரின் மொழியைக் கற்றுக்கொள்வதே ஜனநாயகம். இதுவல்லாமல் ஆளப்படுவோர் ஆட்சி நடத்துவோரின் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பது ஜனநாயகமாகாது. தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள கச்சேரிகளுடன் தொடர்புகொண்டு தமது கருமங்களைச்செய்யும் மக்களுள் மிகப்பெரும்பான்மையோர் தமிழ்ப் பேசும் மக்களாவர். இந்தத் தமிழ்ப் பேசுமக்களை அலைக்கழிப்பதையும், கோபமூட்டுவதையும்தவிர வேறு எத்தகைய சேவையைத்தான் இந்தச் சிங்களம்பேசும் கிளாக்குமார் சாதிக்க முடியுமோ தெரியவில்லை. எனவே தான் இச்செயல் குறிக்கோளற்றசெயலெனக் கருதவேண்டியிருக்கிறது."

திரு. எஸ். எச். பேரின்பநாயகம்,
கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர்

அந்தக்காலம் மலையேறிவிட்டது

"வருங்காலத் தமிழர் சமுதாயத்தின் விமோசனம் விவசாயத்திலும், கைத்தொழில்களிலுமே தங்கியிருக்கின்றது. இந்த உண்மையைக் கடந்தகாலத்தில் தமிழன் உணர்ந்து செயலாற்றத் தவறியதினுலேயே நாம் இன்று பொருளாதாரம் குன்றியவர்களாகக் காட்சியளிக்கின்றோம். வருங்காலத்தில் எந்த ஒருவாலிபனும் அரசாங்க உத்தியோகத்தை நம்பி வாழவும் முடியாது, அரசாங்கத்தின்வேதனத்தை எதிர்பார்த்து வாழ்ந்தகாலமும் மலையேறிவிட்டது. இனிமேல் எல்லோரும் 'எம்கையே எமக்குத் துணை' என்ற முதுவாக்கில் நம்பிக்கைவைத்துத் தமிழ்நாட்டில் பரந்துகிடக்கும் நிலங்களில்குடியேறித் தமிழ்நாட்டைப் பொன்கொழிக்கும் பூமியாக்க ஒவ்வொருதமிழனும் இன்றே திடசங்கற்பம் செய்துகொள்ள வேண்டுமென்று தமிழ்த்தாயின்பேரால் அனைவரையும் அறைகூவி அழைக்கின்றேன்."

திரு. வி. என். நவரத்தினம்,
சாவகச்சேரி எம். பி.

மருதமடுத் திருப்பதி ஆவணி மகோற்சவம்

இம்முறை மருதமடுத்திருப்பதியில் எதிர்பாராத பக்தர்குழாம். ஒருஇலட்சத்துக்கு அதிகமான யாத்திரிகர்கள் 14-ந்திகதி மாலை வேஸ்பரி லும், 15-ந்திகதிகாலை திருநாள் பூசையிலும் சமூகமாய் இருந்தார்கள். இத்திருப்பதியின் சரித்திரத்தில் இதுவே மிகப் பெரிய பக்தர்கூட்டமென்று கூறப்படுகிறது. 10-ம்திகதி தாய் மார்தினமும், 11-ம்திகதி தந்தையர்தினமும், 12-ம், 13-ம்திகதிகளில் சிறுவர்தினமும், இளைஞர் தினமும் கொண்டாடப்பட்டன. அந்தந்தத்தினங்களில் நிகழ்ந்த பிரசங்கங்கள், தர்க்கப்பிரசங்கங்கள் அவற்றிற்குப் பொருத்தமானவைகளாய், மக்களுக்கு ஞானநன்மைகள் விளைப்பனவாயிருந்தன. சிறுவர்தினமன்று மாலை திவ்வியநற்கருணை ஆசீர்வாதத்துக்குமுன் சிறுவர், சிறுமியர் நிரைநிரையாய்த் தங்கள் பாலிய இருதயங்களைத் திவ்வியயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கும் அடையாளமாய்எரிகின்றமெழுகுவர்த்திகளைஏந்தித் தங்கள் ஒறுத்தல், உபவாசமுயற்சிகளுக்கடையாளமாகப் பூக்களை எமது மேற்றிராணியாரான மகாவந். ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகைஅவர்களுக்குக் காணிக்கையாக்கியகாட்சி மக்களைப்பரவசத்தில் ஆழ்த்தியது. 13-ம்திகதியன்றுநடந்தேறிய சற்பிரசாதத் திருநாள் பக்தர்கள்மனதில் என்றும்மறவாத ஒரு பெருநாளாகவிருந்தது. சமுத்திரம்போல் திரண்டிருந்த பக்தர்கள் இருந்தபடியிருக்க, போட்டிக்கோவுக்கு முன்பாகவுள்ள மைதானத்தில் இடப்பட்டிருந்த பாதையிலே அலங்கரிக்கப்பட்டதேரில் நமது மேற்றிராணியாண்டவர் திவ்வியநற்கருணைநாதரைக் கதிர்ப்பாத்திரத்தில் ஏந்தியபடி முழங்கால் மடிந்துநிற்க, பன்னிருவர் அத்தேரை இழுத்துச்செல்ல, முன்னும்பின்னுமாகக் குருமாரும், இளைஞர்களும் மெழுகுவர்த்திவிளக்குகளை ஏந்தியபடி வரிசையாகச்செல்ல, பக்தகோடிகள் திவ்வியநாதரைப்பிரசங்கியாரின் துணையோடு ஆராதித்துநின்றனர். இக்காட்சியை மறக்கவும் மனம்வருமோ?

14-ந்திகதிமாலை சிலாபமேற்றிரான மகாவந். எட்மன்ட் பீரிஸ் ஆண்டகைஅவர்களால் வேஸ்பர் பாடித் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமருளப்பட்டது. அவ்வேளை ஆண்டவர்அவர்கள் செய்தருளிய மனவருட்சிக்குரிய பிரசங்கத்திலே, தேவதாயாரிடம் உலககாரியங்களைக் கேட்பதிலும்மேலாக உத்தமவாழ்க்கை நடத்துவதற்கானஉதவியை இரந்துகேட்குமாறு புத்திகூறினர். அதைத் தொடர்ந்து நமது பாழ்நகர்மேற்றிராணியார்கூறிய நன்மதியிலே, கத்தோலிக்க மக்களிடையே சகோரத்துவமும், ஐக்கியமும் நிலவவேண்டுமென்றும், சாதி சமயபேதமில்லாது தேவனின் முன்னிலையில் அவருக்குத் தொண்டுபுரிய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். மறுநாள் சிலாப மேற்றிராணியாராலே திவ்வியபாடற்பூசை நிறைவேறியது. மருதமடுச் செபமாலைஅன்னையின் திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாய் எடுத்துச்செல்லப்பட்டுத் திரும்பவும் பீடத்துக்குக் கொண்டுவரப்பட்டு யாத்திரிகர்கள் ஆசிஇரக்கும்செபம் சொல்லப்பட்டபோது வெள்ளம்போல் அங்குகூடியிருந்த அத்தனைபேருடையகண்களிலுமிருந்தும்பொலபொலென்று நீர்சுரந்து வழிந்ததென்றால் மாதாபதியை விட்டுப் பிரிய மனமில்லாமல் பிரியும்அந்நிலையை வேறுஎப்படிக் கூறமுடியும்? திருச்சுரூப ஆசீர்வாதம் அருளப்பெற்றதோடு திருநாள் முடிவெய்தியது.

— எஸ். எம். ஜே.

எரோதனின் பரிசு

—: பாத்திமா :—

மதுக்கிண்ணங்களோடு கிண்ணங்கள் மோதிய சப்தம் கணீர்கணீ ரென்று ஒலித்தது. அரண்மனையே குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது. விருந்துமண்டபத்தில் நீண்டமேசையிலே வெள்ளோத்துணி விரிக்கப்பட்டிருந்தது. அதன்மீது அழகிய சிற்பவேலைப்பாடு நிரம்பிய தட்டுக்களில் விதம்விதமான உணவுப் பொருள்கள் மேசைமுழுவதும் ஆங்காங்கு வைக்கப்பட்டிருந்தன. வண்ண வண்ணநிறங்களில் மலர்க்கொத்துகளும், இனியகனிவர்க்கங்களும் இடையிடையே காணப்பட்டன. வர்ணப்பட்டாடை தரித்தவர்கள் அதைச்சுற்றிலும் கூடியிருந்தார்கள். அவர்களின் காங்களிலே நிரம்பிவழியும் மதுக்கிண்ணங்கள் இருந்தன.

கிரேக்கர், எகிப்தியர், யூதர், உரோமையர்களெனப் பலநாடுகளில் இருந்தெல்லாம் விருந்தினர் வந்திருந்தனர். அங்குகூடியிருந்தவர்கள் தங்கள் நாட்டு அதிசயங்களையும், வீரச்செயல்களையும் பற்றிக் கூறிப் பெருமை அடித்துப் பெரும்ஆரவாரம் செய்தார்கள்.

அடிமைப்பெண்கள்சிலர் விருந்திலே கலந்துகொண்டவர்களைக் களிப்படையச்செய்வதில் ஈடுபட்டுப் போட்டியிட்டுக் கிண்ணங்களிலே மதுவை ஊற்றுவதும், ஆடுவதும், பாடுவதுமாக இருந்தார்கள். சிலர்வாத்தியங்களை மீட்டி இன்னிசை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

நீலவானிலே மின்னும் சோதித்தாரகைபோல் ஒளிர்விடும் கற்கள்பதித்த தங்கமதுக்கிண்ணத்தைக் கையில்ஏந்தியவாறு விருந்தினர்களிடையே அரியணையில்வீற்றிருந்தான் அரசன் ஏரோதன். அவனுக்குஅருகிலே ஒருபோழுகி அமர்ந்திருந்தாள். அவள்தான் அரசி ஏரோதியாள். பார்ப்பவர் கண்களைப் பறிக்கும்வண்ணம் அவள்பட்டுப்பட்டாவளிகளை அணிந்திருந்தாள். இரத்தினக்கற்கள் வைத்திழைத்த பொற்கிரீடம்ஒன்று ஏரோதனின் தலையிலே சொலித்துக்கொண்டிருந்தது. ஆனால், மதுஅருந்தியதாலோ என்னமோ அவன்கண்கள் கோவைப்பழம்போல் இரத்தச்சிவப்பேறி யிருந்தன.

"சலோமி! சலோமி!! எங்கே அவளை இன்னும் காணவில்லை" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான் மதுவின்போதையில் ஊறிக்கிடந்தமன்னன்.

கலிலேயாக்கடலோரத்தில் திபேரிய நகரின்சிற்றரசன் ஏரோது. ஆடம்பரத்துக்கதிபதி, அதிலும் சிற்றின்பப்பிரியன். தனது பிறந்தநாள்விழாவைப் பிரமாண்டமான முறையிலே சகல ஆடம்பரங்களோடும் அவன்கொண்டாடிக்கொண்டிருந்தான். தான் அரசு கட்டிலேறத் தன்அண்ணனையே பாதாளச்சிறையில்தள்ளிக் கழுத்தைநெரித்துக் கொன்றான். பிறகு அண்ணன் மனைவி ஏரோதியாளையே தன்மனைவியாக்கிக் கொண்டான். அதேஅண்ணனுக்கும், ஏரோதியாளுக்கும் பிறந்தவள்தான் சலோமி. காண்பவர்மதிமயங்கும் எழிலுடன் சித்திரப்பாவைபோல அழகோடுவிளங்கினாள் அவள். அந்தஅரசிளங்குமாரியே நடனமாடுவதென்றால் கேட்கவும்வேண்டுமா?

அலங்காரமிக்க விருந்துமண்டபத்திலே ஆர்ப்பாட்டக்குரலொலி எழுந்துகொண்டிருந்த நேரத்தில் அதற்குச் சமீபமான பாதாளச்சிறையில் அடைபட்டிருந்தார் ஸ்நாபகஅருளப்பர். அவரைப் பித்தனென்று சிலரும், எலியாஸ்தீர்க்கதரிசியின் மறுபிறப்பென்றுசிலரும் கூறிக்கொண்டார்கள். வெட்டுக்கிளியையும், காட்டுத்தேனையும்உண்டு வனாந்தரத்தில் கடுந்தவம் செய்துவந்ததால் ஞானியென்று கூறினார்கள் சிலர். அவர்சொல்லும் வார்த்தைகளிலே நம்பிக்கைகொண்டசிலர் அவர்தான் 'மெசையா'என்று சொல்லிக்கொண்டார்கள்.

அரசிஏரோதியாளின் அக்கிரமச் செயலை வெளிப்படுத்தி அவளுக்கு விரோதமாகப்பேசிய குற்றத்திற்காக அவரைக் கிறீஸ்துளின் பாதாளச்சிறையிலே தள்ளியிருந்தான் அரசன்ஏரோதன். அவரைத்தான் சிறைவைக்கமுடிந்ததேதவிர, அவர்கூறிய தீர்க்கதரிசனங்களையோ, நீதிவாக்கியங்களையோ தடுத்துநிறுத்த முடியவில்லை. மக்கள்மத்தியிலே கல்லசெல்வாக்கு அவருக்குஇருந்தது. மன்னனுக்கோ ஏரோதியாளுக்காக அவரை வஞ்சம் தீர்த்துக்கொள்ள எண்ணம்இருந்தது. ஆனால், அவன்நெஞ்சத்திலே அதற்கான துணிவில்லை. எனவே, அவரைப் பாதாளச்சிறையிலே வைத்திருந்தான்.

சலோமி! சலோமி! என அழைத்துக்கொண்டிருந்தான் மன்னன் எதிரே நடப்பவைகளைக் கவனியாமல்.

அரசி தனது ஆசனத்தை விட்டெழுந்து உள்ளேசென்றாள்; இளவரசி சலோமி தனதுஅறையில் சேடிகளுடன் நடனத்திற்காக விசேஷஅலங்காரங்கள் செய்துகொண்டிருப்பதைப் பார்த்தாள். "என்பிரியசலோமி! இன்னும்உன்அலங்காரம்முடியவில்லையா? மன்னரும், விருந்தினரும் உனக்காக அங்கே காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றாள்அரசி.

"அம்மா! இதோநொடிப்பொழுதில் வந்துவிடுகிறேன்" என்றாள்சலோமி.

"சலோமி! நான்சொன்னவை உனக்குநினைவில் இருக்கிறதா?" என்றாள்அரசி.

"இதுதானே அம்மா!" என்றுதன் தலையில் கையைவைத்துக் காட்டினாள் சலோமி.

"ஆம்! மறந்துவிடாதே கண்மணி. மன்னர் மதமயக்கத்தில் இருக்கிறார். இதுதான் தக்கதருணம். சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது."

"அம்மா! வாக்குத்தவறுவேனென்று நினைக்கிறாயா? உனக்காக எதுவேண்டுமாயினும் செய்வேன். இன்னும்சற்றுவேளையில் உனதுநெடுநாளையஆசை பூர்த்தியாவதை நீயே பார். அப்போது தெரிந்துகொள்வாய் உன்மகளின் சாமர்த்தியத்தை." மனநிறைவோடு அங்கிருந்து அகன்றாள் அரசி.

"சலோமி! எங்கே என்சலோமி? யாரங்கே? சலோமியின் நடனத்தைக் காணமன்னர்பிரான் காத்திருப்பதாகத் தெரிவி." "கண்களைமூடி ஒருபக்கமாகச் சாய்ந்தான்மன்னன்.

"இதோ! இந்தநாட்சைஇரசத்தைப் பருகுங்கள். இதுஉங்களுக்கென்றே சீஸரால் அனுப்பிவைக்கப்பட்டது"என்று கூறிக்கொண்டே மதுக்கிண்ணத்தில் மதுநிறைத்து வழியவழிய ஊற்றிக்கொண்டே மன்னனிடம்நீட்டினாள்அரசி.

அதைவாங்கிப் பருகியவாறே "ஆஹா! என்ன சுவை! என்ன இனிமை! இதைப்போன்றஇரசத்தை நான்என்றுமே அருந்தியதில்லை. எங்கே இன்னுமே அருந்தியதில்லை. எங்கே இன்னுமொருகிண்ணத்தை மீண்டும்நீட்டினான் அரசன்.

"ஐல், ஐல், ஐல்" சதங்கையொலி கிளம்பிற்று.

விருந்துமண்டபம் முழுவதும் அமைதிநிலவியது. எல்லோரும் சத்தம்வந்த திக்கைநோக்கினர். ஆட்டம் ஆரம்பமாகியது. வசந்தகால வர்ணக்கிளிபோல் அழகுப்பிம்பமாய்க் காட்சியளித்தாள் சலோமி. அவளைப்பார்க்காதகண்களே அக்கூட்டத்தில்இல்லை. அந்நாட்டின் இளவரசிசலோமி நடனமாடவருகிறாள்.

தென்றலிலே அசைந்தாடும்வண்ணமலரைப்போல் அவள்ஆடினாள். முத்துப்பல்வரிசைகளை வெளியேகாட்டியவாறு புன்னகையரும்பப் பம்பரம்போல ஆடினாள். ஆட்டத்தைக்கண்டஅரசன் "அபாரம்! அபாரம்!!"என்றான் மதுவை மேலும் சுவைத்தவாறே.

எவருமே தங்கள்வாழ்நாளில் இதுவரைகாணாத புதுமைநிறைந்தஆட்டம். சுற்றிவளைசுழன்றாள். குனிந்துநிமிர்ந்து வளைந்துநெளிந்து ஆடினாள்.

அவளுடையநடனம் முடியும்தருவாயில் ஊழிக்கூத்தின் கோரத்தாண்டவத்தைப்போல் பயங்கரவேகமுடையதாய் இருந்தது. தென்றலிலே ஆரம்பித்தநடனம் புயலிலேவந்து முடிவடைந்தது. பனித்துளிகளைப்பெற்ற புதுமலர்போல் வேர்வைஅரும்பிவழிய அரசன்முன்வந்து மண்டியிட்டாள் இளவரசிசலோமி.

"ஆஹாஹா! அற்புதம், அற்புதம்!! என்றான் மன்னன். சுகதோஷ ஆரவாரம் விருந்துமண்டபத்தையே அதிரவைத்தது.

"சலோமி! என்அருமைச்சலோமி! உனக்கு வேண்டியதைக்கேள், தருகிறேன். என்னவேண்டும்? அதைச்சீக்கிரம்சொல் என்றான் மன்னன்.

"நான்எதைக்கேட்டாலும் தருவீர்களாஅரசே" என்றாள்சலோமி.

"எதைக்கேட்டாலும் தருகிறேன். ஏன் என்மணிமுடிவேண்டுமா? அல்லதுஇந்தநாட்டில் பாதிவேண்டுமா? எதுகேட்டாலும் தருகிறேன்"என்றான் மன்னன்.

"இது உறுதிதானே அரசே."

"நிச்சயமாக உறுதிதான். உனது இன்பமான நடனத்திற்கு இந்தஉலகத்தையே பரிசளித்தாலும்தகும்."

"அப்படியானால், ஒருவெள்ளித்தட்டில்..."

"வெள்ளித்தட்டில்என்னவேண்டும். என்பொற்கிரீடம் வேண்டுமாஉனக்கு? இந்தஉலகத்து அழகிகளிலெல்லாம் சிறந்தஅழகி நீதான். பொற்கிரீடம் என்ன, இந்தப்பொன்னை பூவுலகையே உனக்குப்பரிசாகத்தரலாமே!"

"மறுக்காமல் தருவீர்களாஅரசே!"

சலோமி! உனக்குச் சந்தேகம்ஏன்? மன்னன்ஏரோதன் சொன்னசொல்

உனக்குப்பிரியமா, சொல்சலோமி?"

விருந்துமண்டபத்தில் இருந்தவர்கள் எல்லோரும் திகைத்தார்கள். அரசன் மனக்கிலேசம் அடைந்தான். மருண்டான், தவித்தான், தடுமாறினான். இளவரசிசலோமி கேட்பதைத் தவிர வேறுவழியில்லை என்பதை உணர்ந்தான்.

"சலோமி!" அரசனின்குரல் அடித்தொண்டையிலிருந்து கிளம்பியது. "எனக்காக உன்முடிவை மாற்றிக்கொள்ள முடியாதா?"

"முடியாது அரசே முடியாது. எனக்கு அவன்தலைதான் வேண்டும். நீங்கள்கொடுத்த வாக்குறுதி என்னவதுஅரசே?" அவளுடையகெஞ்சுறுதி கொஞ்சமேனும் தளரவில்லை.

"சரி, கலிலேயாநாட்டின் இளவரசிக்குக்கொடுத்த வாக்கைக்காப்பாற்றவில்லை ஏரோதன்என்ற பழிச்சொல்லை ஏற்கமாட்டேன். ஏய்! யாரங்கே? இந்தாமுத்திரைமோதிரம். கொண்டுபோய்க்காட்டி அந்தப்பாதாளச்சிறையில் இருக்கும் ஞானியின் சிரசைவெட்டி ஒருவெள்ளித்தட்டில் வைத்துக்கொண்டுவா, போ"எனக் கட்டளையிட்டான்அரசன்.

"சிறைக்குள் கர்த்தரின்வழிகளைச் செவ்வையாக்குங்கள்"என்று துடித்துக்கொண்டிருந்த ஸ்நாபகரின் இருதயத்துடிப்பு மறுபடியும் கேட்கமுடியாதபடி திடீரென அடங்கிவிட்டது. சிறைக்குள்ளே பெரும்அமைதிநிலவிற்று. உள்ளிருந்து ஒருகாவலன் வெள்ளித்தட்டில ஸ்நாபகஅருளப்பரின் சிரசைவைத்து ஏந்தியவண்ணம் வெளியில்வந்தான். தட்டிலிருந்து செங்குருதிவழிந்தோடிக்கொண்டிருந்தது.

அமைதியும், சாந்தமும் தவழ்ந்திடும் அழகியமுகத்தோடு கண்களைமூடி இறைவனைத் தியானிப்பதுபோல்—எல்லோரிடமும் புன்னகைபூர்ப்பதுபோல் அந்தஞானியின்சிரசு வெள்ளித்தட்டில்இருந்தது. இளவரசி சலோமியின்பக்கமாய்த் தட்டைக்கொண்டுவந்து நீட்டினான்காவலன்.

அதைப்பார்த்ததும் அவள்மனதில் ஒருவிதஅச்சம் குடிகொண்டது. கைகளைநீட்டி அந்தத்தட்டை வாங்கிக்கொண்டதும் இளவரசி சலோமிக்குத் தன்தலையே சுழன்றுவிழுந்ததைப்போன்ற உணர்ச்சிஏற்பட்டது. ஏதோகுற்றம் செய்தவளைப்போன்று அவள் நெஞ்சுபடபடென்று அடித்துக்கொண்டது. உடம்பிலே ஒருவிதநடுக்கம் உண்டாயிற்று.

இளவரசிசலோமியின் ஆட்டத்தை இரசித்த ஏரோதின்கண்கள் இந்தக் கோரக்காட்சியைக்கண்டு இருளடைந்தன. தலைகனத்தது. முகம்கறுத்தது. தனதுஉணர்விழந்து அப்படியே அரியணையில் ஒருபுறமாய்ச் சாய்ந்தான். கையிலிருந்த மதுக்கிண்ணம் டணர் எனத் தரையில்வீழ்ந்து உருண்டோடியது. இந்தச்சப்தத்துக்கிடையே ஓநரிப்பொலி கிளம்பியது. ரோமை தீப்பற்றிஎரியும்போது 'நீரோ'மன்னன் வீணைவாசித்ததுபோல!

[மத். 14—மாற். 6]

—ஞானதாசன்

அருட் செல்வி

பரிசுத்த சுவிசேஷத்தில்

களிகூர்ந்த காரணிக்கம்

(முன் தொடர்ச்சி)

III

முதலாம் காரணிக்கத்திற் கண்ட படியே மரியம்மாள் சருவேசுரனுடைய பரிசுத்த மாதாவானாள். "வார்த்தையானது மாமிசமாகி எங்களுடனே வாசமாயிருந்தது." சருவேசுரனால் அனுப்பப்பட்ட சம்மனசானவர் மீண்டும் சருவேசுரனிடம் திரும்பச் சென்றார். அன்றிரவு மோட்சலோகத்தில் யாவரும் ஆனந்தங்கொண்டாடினர். அன்றியும், சருவேசுரன் தமது அன்பர்களுக்குத் தம்முடைய அந்தரங்க இரகசியங்களை அடிக்கடி வெளிப்படுத்துவதுண்டு. "இதோ, உங்கள் பந்துவாகிய எலிசபேத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கெற்பந்தரித்

திருக்கிறாள். மலடி எனப்பட்ட அவளுக்கு இது ஆறுமாதம். ஏனெனில், சருவேசுரனால் கூடாதவாக்கு ஒன்றும் இல்லை" என்று (லூக். 1, 36, 37) கபிரியேல் தேவதூதன் மூலம் இந்த இரகசியத்தை ஆண்டவர் வெளிப்படுத்தினார். மரியம்மாளோ சருவேசுரன் அவள் மனத்தில் ஒரு நன்னினைவைத்தாலும், அல்லது ஒரு சேவையை விரும்பினாலும், அவள் தனது விருப்பு வெறுப்புக்களைக்கவனியாது உடனே கீழ்ப்படிதல் வழக்கம். ஆகவே, பிறர்நல சேவையே தன் இலட்சியமாகக் கொண்டு உடனே புறப்பட்டு மலை நாட்டிலே, யூதாதேசத்திலுள்ள அயின்கரீம் என்னும் ஊருக்குத் தீவிரமாய்ப் போனாள். அவள் பெருமைக்கு ஆசைப்படாதவளாயும், புகழ்ச்சிக்கு அஞ்சியவளாயும் இருந்தவளாதலால் கபிரியேல் தனக்குத் தெரிவித்த இரகசியத்தை எவரிடமும் சொல்லவில்லை. 'என் இரகசியம் எனக்கு, என்ற கொள்கையே அவளது சீவியம். சூசையப்பரும் அவளுடன் சென்றிருக்கவில்லை. அவள் உறவினர் யாருடனும் சென்றிருத்தல் வேண்டும். கால்கடுக்க, வருந்தி மலையேறிப்போய்ச் சக்கரியாஸ் இல்லத்தைக் குறுகினாள்.

எதிர்பாராமல் எலிசபேத்தம்மாளும் வாசற்படியில் நின்றுகொண்டிருந்தாள். மரியம்மாளும் மிகவும் அன்புடன் விளித்துஅவளை வாழ்த்தினாள். மரியம்மாள் சொன்னவாழ்த்துதலை எலிசபேத்தம்மாள் கேட்ட மாத்திரத்தில் அவளுடைய உதரத்தில் இருந்த பிள்ளை துள்ளிற்று. எலிசபேத்தம்மாளும் தூய ஆவியினால் நிரப்பப்பட்டு யூதவழக்கப்படியுள்ள தன் நெருங்கிய பந்துவைக் கட்டியணைத்து முத்தமிடுவதற்குப் பதிலாய் முழந்தாட்படியிட்டுஉரத்த சத்தமாய்க்: கூப்பிட்டு "ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே, உமது திருவயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதாமே. என் ஆண்டவருடைய தாயார், என்னிடத்தில் எழுந்தருளிவரல் எனக்குக் கிடைத்ததெப்படி? இதோ, நீர் வாழ்த்தின சப்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றில் உள்ள பிள்ளை அக்களிப்பால் துள்ளிற்று; அன்றியும் விசுவசித்த வளாகிய நீரே பாக்கியவதி. ஏனெனில், ஆண்டவரால் உமக்கு வசனிக்கப்பட்டவைகள் நிறைவேறும்" என்றாள். (லூக். I, 42—45)

இதிலிருந்து மரியம்மாளுடைய இரகசியம் எலிசபேத்தம்மாளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். சருவேசுரன் தன் பக்தர்களுக்கு அந்தரங்கங்களை வெளியிட்டுவருகிறாரே. மரியம்மாளின் இருதயம் ஆனந்தத்தால் நிரப்பப்பட்டுப் பொங்கிவழியும் நிலைமையில் இருந்தது. அதை வெளியேகாட்டாமல் இருக்க அவளால் முடியாமற்போயிற்று. சந்தோஷமும், நன்றித்துதியும் நிறைந்த தனது ஆனந்தகீதமான 'மஞ்ஞீவிக்காத்தை'ப் பாடியருளினாள். "என் ஆத்துமமானது என் ஆண்டவரை மகிமைப்படுத்துகின்றது. சருவேசுரனிடத்தில் என்மனமும் ஆனந்தமாய் எழும்பி மகிழ்கின்றது. ஏனெனில், தமது அடியாளுடைய தாழ்மையைக் கிருபைக் கண்கொண்டு பார்த்தருளினார். ஆகையால், இக்காலம்முதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பாக்கியவதியென்பார்கள். ஏனெனில், வல்லமைமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினார். அவருடைய நாமம் பரிசுத்தம் உள்ளது .(லூக்.I,46—49)

உலகிலேயே இத்தகைய இனிய கீதம் கிடையாது என்று சொல்லும் படியான மாண்புயர் அற்புத கீதம் இது. எலிசபேத்தம்மாள் இத்தனை வார்த்தைகளையும் அச்சத்துடனும், மேரைமரியாதையுடனும் மௌனமாகக் கேட்டுக்கொண்டு நின்றாள். திருச்சபையெங்கும் சதாகாலமும் பாடப்பெற்றுவரும், மரியம்மாளின் வெற்றியின் சின்னமான இப்பாடல்களைத் திருச்சபையின் மக்கள் ஆயிரக்கணக்காய்த் தினந்தோறும் உச்சரித்துக்கொண்டு வருகின்றனர். மரியாயின் சேனையின் சங்கிலிச் செபம் இவ்வற்புதபாடலை அடக்கியிருக்கிறது. அந்தநன்றியறிந்த கீதத்தின் அடையாளமாக அதனுடைய முதல் அடியும் மரியம்மாளின் ஓயாத எண்ணமுமாகிய வாக்கியம் மிகப் பொருத்தமாக அவளுடைய தலைக்கு மேலே நெருப் பெழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருப்பதைத் தெசராவின் விருதுக்கொடியில் காணலாம். இப்பாடல்கள் அவளுடைய மனுஷீகத்தின் வெற்றிக்கோஷம். சேனைச் சங்கிலிச் செபத்தில் இப்பாடலைத்

தொடங்குமுன் "சந்திரனைப்போல ரூபவதியே....." என்ற அதிசய கோஷம் எழுப்பியே நின்று பாடுவதால் மரியம்மாள் பெருமை நிறைவதியென்பதற் கையமேது.

மரியம்மாள் பாடிய 'மஞ்ஞீவிக்காத்' கீதத்தில் மேலும் தொடர்ந்து இசைக்கின்றாள். கடவுளுக்குப் பயந்து நடக்கிறவர்கள்மேல் அவரது கிருபை தங்குவதையும், இருதய சிந்தனையில் கர்வமுடையவர்களைச் சிதறடிப்பதையும், வல்லபமுடைத்தானவர்களை ஆசனத்தில் நின்றுதள்ளி, தாழ்ந்தவர்களை உயர்த்துவதையும் உள்ள படி எடுத்துக் கூறுகின்றாள். (லூக். I, 50—55)

நிற்க, இக்கீதத்தின் நீதிகள் பலவுள. சருவேசுரன் நமக்கு வரங்களை அளித்துள்ளார் என்று அறிதல் தவறல்ல; கர்வமும் ஆகாது. நமது நல்ல நிலைமை, திறமை, அழகு, அன்பு என்பவற்றை உண்மைப்படி உணர்த்துவதால் கெடுதல் ஒன்றும் இல்லை. அவையெல்லாம் ஆண்டவனால் அளிக்கப்பட்ட வரங்கள் என்றும், அவற்றிற்கெல்லாம் கணக்களிக்கவேண்டியவரும் என்றும், இதற்கிடையில் அவற்றை அவருடைய சேவையில் உபயோகித்தல்வேண்டுமென்றும், நாம் நினைக்க மறந்தால் மட்டுமே கெடுதல் ஏற்படுகிறது. மரியம்மாள் பெற்ற மகிமைகள் எல்லாம் கடவுளுக்கே சொந்தம். அவளும் அவற்றைக்குறித்து இரட்சகராகிய சருவேசுரன்மட்டில் ஆனந்தங்கொண்டாள். சருவேசுரன் நமக்குச்செய்த நன்மைகளை அறியாததுபோல் பாவனைசெய்தல் தாழ்மையாகாது. மெய்யாகவே தாழ்மையுள்ளவர்கள் அன்பை அங்கிகரித்து அதற்காக நன்றிகூறத் தவிரமாய்ப் போவார்கள். நன்றியறிதலும், தாழ்மையும் ஒன்றுசேர்ந்தே இருத்தல்வேண்டும். 'வல்லபமிக்கவர் பெருமையுள்ளவைகளை என்னிடத்தில் செய்தருளினார்' என்னும் வாக்கியம், பெருமை சிலாக்கியம் நம்மைத்தாக்காமல் தடுப்பதற்கு ஏற்ற கேடயமாயிருப்பதுபோல் வேறொன்றுமில்லை. நமது ஞானஆனந்த மேலீட்டின்போது 'மஞ்ஞீவிக்காத்' என்னும் சிறந்த கீதத்தை எழுப்புவோமாக.

மரியம்மாள் மூன்று மாதகாலம் எலிசபேத்தம்மாளுடன் தங்கியிருந்ததால் அளவற்ற அருள்களால் அக்குடும்பத்தை ஆசீர்வதித்தாள். கபிரியேல் சம்மனசைப்போல் எலிசபேத்தம்மாளும் மரியம்மாளை வாழ்த்தினாள். நாமும் பிரியதத்தமந்திரமோதும்போதும் தேவதூதரும், அர்ச்சியசிஷ்டவளும் முழந்தாட்படியிட்டு வாழ்த்தியதுபோன்று பத்திவிநயத்துடன் நினைத்துச் செபமாலையை ஓதுவோமாக. நம்மில்லங்களில் மரியம்மாளின் காட்சியை விரும்புவோம். பிறர்சிநேகமும், பிறர்நல சேவையும் மரியம்மாளின் மாதிரிகையாய் நம்மிடையே நிலவின் பாக்கியமான உலகத்தைக் காண்போம். சாந்தமும், சமாதானமும் உள்ள இருதயங்களைக் கண்டுகளிப்போமென்பதற் கையமில்லை.

(தொடரும்)

கிறீஸ்துவ சீவியம்
விசுவாசிகளின் அப்போஸ்தலத்துவம்
கத்தோலிக்க சேவை

"ஏன்இந்த வீண்தொந்தரவு? ஏன்அவசியமின்றி அயலாரோடு முட்டுவான்? கிறீஸ்துவ சீவியமோ, அப்போஸ்தலத்துவமோ, நவீன முறையாகக்காட்டப்படும் கத்தோலிக்கசேவையோ எல்லாம் ஒன்றுதானே. நாமும் நம்பாடுமாயிருந்து செபத்தைச்செய்து கடவுளைப் பிரார்த்தித்தால் எல்லாம் ஆச்சுதே" என்கிறார் சந்தியா—அவரிடம் வந்த சேவாசங்க விருத்தியாளரைப் பார்த்து. சந்தியா சொல்வது உண்மைதானா? இல்லை, இல்லை. அர்த்தங்களின் வேறுபாட்டை இவ்விடத்திற்காட்ட முயல்கின்றோம்.

"கிறீஸ்துவசீவியம்" என்று சொல்லும்போது கிறீஸ்துநாதரில் விசுவசிக்கிறவன் அவருடைய சுவிசேஷ போதனையை ஏற்று அதன் சத்தியங்களின்படி தனது சீவியத்தைச் சீர்ப்படுத்தித் தேவ அருளில் வாழ்வதைக் குறிக்கும். ஒருவன் தனது ஆத்துமத்தை ஈடேற்ற வேண்டுமானால்—மோட்சஇராச்சியத்திற் சேரவேண்டுமானால் தன்னை மறுத்துத் தன்சிலுவையைச் சுமந்து கிறீஸ்துநாதரின் போதனைவழியில் அவரைப் பின் செல்லவேண்டும். இதுவே கிறீஸ்துவசீவியம்.

விசுவாசிகளின் அப்போஸ்தலத்துவம்:

ஆனால், உத்தம கிறீஸ்துவசீவியம் ஒருபோதும் மறைவிலிருக்கமுடியாது. வெளிச்சம் பிரகாசிக்கும். காரம் அயலைத்தாக்கும். தம்மைப் பின்செல்லுகிறவர்களைப்பார்த்து யேசுக்கிறீஸ்துநாதர்: "நீங்கள் உலகத்தின் ஒளியாயிருக்கிறீர்கள்." "நீங்கள் உலகத்தின் உப்பாயிருக்கிறீர்கள்." என்கிறார். ஆகவே, புண்ணியக் கிருத்தியங்களினால் ஏனையோர்முன் பிரகாசிப்பது உத்தம கிறீஸ்துவசீவியத்தின் இயல்பு. நன்முன்மாதிரியான நடத்தையினால் "மாவினுட் புதைக்கப்பட்ட புளிக்காரத்தைப்போன்று சமூகத்தைச் சன்மார்க்கத்திற் பதப்படுத்துவது அதன்இலட்சணம்.

எரிகிறவெளிச்சம் பறக்கும்பூச்சிகளைக் கவர்ந்து நெருப்பில் எரியச்செய்வதுபோலத் துஷ்டன் தன் துன்மார்க்க செயல்களால் அறிவீனர், பலவீனர் பலரைத் தன்வசப்படுத்திக்கெடுக்கிறான். இதற்கெதிராகத் தேன்சுரக்கும் மலர் தன் அழகு ரூபத்தாலும், பரிமளவாசத்தாலும் தேனீயைக்கவர்ந்து அதைப் போஷிக்குமாப்போல் உத்தமகிறீஸ்துவன் எவனும் தேவஅருளின் பலனும் புண்ணியங்களால் நிறைந்து தன்அயலாரைக் கவர்ந்து அவர்கள் சீவியத்தைப் புண்ணியத்தில் புனிதப்படுத்துகிறான். போதனையாலும், சாதனையாலும் கிறீஸ்துநாதரை உலகுக்கு எடுத்துக்காட்டுகிறான்—உதவுகிறான். இதுவே விசுவாசியின் அப்போஸ்தலத்துவம். இவ்விதஅப்போஸ்தலத்துவம் கிறீஸ்துநாதரின் ஞானச்சரீரத்தின் அவயவங்களான ஒவ்வொரு கிறீஸ்தவனையும் சார்ந்த தவிர்க்கமுடியாத கடமையாகும். ஏனெனில், ஒவ்வொரு உறுப்பின் வளர்ச்சியும் ஏனையஉறுப்புகளிற் தங்கியுள்ளது. ஒன்றின்

கேடு மற்றவையைத் தடுக்கும்; ஒன்றின் சிறப்பு மற்றவையைச் சிறப்பிக்கும்.

கத்தோலிக்க சேவை:

தேக வளர்ச்சியில் சகலஉறுப்புகளின் ஒத்துழைப்பும் பொதுவாக அவசியமானாலும் சிலஉறுப்புகளின் சேவை இன்றியமையாததாகவும் (உதாரணமாக இருதயத்துடிப்பு), சிலஉறுப்புகளின்சேவை அவசியமானதாகவும் (வயிற்றின் சிரணம்), வேறு சிலஉறுப்புகளின் சேவை பிரயோசனமுள்ளதாகவும் (கைகால் அப்பியாசம்) இருக்கின்றது. இவ்விதமே தமது ஞானச்சரீரமாம் திருச்சபையை யேசுக்கிறீஸ்துநாதர் ஞானஉறுப்புகளின் சேவையால் வளரச்செய்கிறார். இன்றியமையாத சேவைகளாக, உறுப்புகளாக அதனைப் பகிர்ந்துதவும் ஞானமேய்ப்பர்களை நியமிக்கிறார். பிரயோசனமுள்ளதாகச் சகலவிசுவாசிகளினதும் உத்தமகிறீஸ்துவ சிவியத்தையும் சாதாரண அப்போஸ்தலத்துவத்தையும் கட்டளையிடுகிறார். அவசியமான சேவையாகவோ, சாதாரணமான உறுப்புகளாம் விசுவாசிகளிடையிற் சிலரைத் தெரிந்தெடுத்து, ஒன்று சேர்த்து அப்போஸ்தொலிக்க குணங்கள், புண்ணியங்களாற் சிறப்பிப்பது, இன்றியமையாத அவயவங்களாம். ஞானமேய்ப்பரின் சேவையில் ஒத்துழைக்க வழிநடத்துகிறார். இவ்வித அவசியசேவைதான் கத்தோலிக்கசேவையென இன்றுகுறிப்பான கருத்துடன் அழைக்கப்படும் சேவையாகும்.

எனவே, ஞானமேய்ப்பரின் அங்கிகாரத்திற்குட்பட்டு, அவர்களுடன் ஒத்துழைத்து, ஒழுங்கு முறைப்படி இணைக்கப்பட்டு, கிறீஸ்துநாதரின் ஞானச்சரீரமாகிய திருச்சபையின் விருத்திக்குரிய தொண்டில், அப்போஸ்தொலிக்க வேலையில், ஈடுபட்டுச் சாதாரண விசுவாசிகள் புரியும்சேவைதான் "கத்தோலிக்க சேவையாம்."

சந்தியா இதை உணர்ந்தால் மேற்கண்டவாறு ஒருபோதும் கூறவேமாட்டார். தானும் தன்பாடுமென்றிராது கிறீஸ்துநாதர் தமக்குக் கொடுத்த கொதைகளின்படி தன்னிடம் அவர்எதிர்பார்ப்பது ஓர் சேவை. அந்தச்சேவை சாதாரணபிரயோசனமுள்ள ஓர்சேவைதானே? அன்றேல் அதிலும் அவசியமான கத்தோலிக்க சேவைதானேவென்று கிறீஸ்துநாதரின் விருப்பதை ஆராய்ந்து வழிபடுவாரன்றே!

மணற்காடு

பரித்தித்துறையிலிருந்து ஐந்துமைல் தூரத்தில் கடலோரமாக மணல்மேடு செறிந்த மணற்காடு என்னுங்கிராமம் இருக்கின்றது. இப்பகுதியின் இயற்கைச்செறிவு மிகவும்அழகாயுள்ளது. ஆதியில் இவ்விடமிருந்த ஓர்கத்தோலிக்ககோவிலையும், பாடசாலையையும் மண்மூடிப் பாரியமணல்மேடாய்க் காட்சியளிக்கின்றது. இக்கிராமத்தில் அதிகமாகக் கத்தோலிக்கமதத்தினரே வாழ்கின்றனர். இங்கு ஓர்ஆரம்பபாடசாலையும், கோவிலும்இருக்கின்றன. இக்கிராமம் பிரயாணவசதியற்றது. இங்குள்ளார் பெரும்பாலும் கால்நடையாகவே பிரயாணஞ்செய்வர்.

செம்பியன்பற்று, குடத்தனைக்கிராமப்பகுதியாரின் அகில—இலங்கைச் சுகாதாரவாரவிழா தாளையடிக்கத்தோலிக்க பாடசாலையில் மிகவிமரிசையாக நடைபெற்றது. பலபாடசாலைகள் பங்குபற்றிப் போட்டியிட்டன. மணற்காட்டுப் பாடசாலைமாணவர் பேச்சு,பாட்டு, சுகாதாரநடனம் ஆகியமூன்றுபோட்டிகளிலும் பங்குபற்றி மூன்றிலும் முதலிடம் வகித்துப் பரிசுபெற்றமை போற்றப்படத் தக்கதாகும்.

பிரிவுஉபசார வைபவம்

அல்வாய்க் கத்தோலிக்கபாடசாலையில் கடந்த மூவாண்டுகளாக ஆங்கில உதவிஆசிரியராகக் கடமையாற்றிவந்தவரும், தமது தாயகமாகிய ஊர்காவற்றுறைப் பட்டினசபைத் தலைவராய்ச் சமீபத்தில் தெரிவுசெய்யப் பெற்றவருமான திரு. சூ. தேவசகாயம்அவர்கட்குச் சென்ற 7-8-59-இல் எமதுபாடசாலை ஆசிரியர்களாலும், மாணவர்களாலும்ஒருமகத்தான பிரிவுஉபசாரம் மனமுவந்தளிக்கப்பட்டது. அன்னாரின் அடக்கமானபோக்கையும், கடமைதவறாத ஆசிரியசேவையையும் பாராட்டி அன்பளிப்புவழங்கித் தங்கள்நன்றியைத் தெரிவித்து ஊர்காவற்றுறைப் பட்டினசங்கத்துக்கு நேர்மையான ஆசிரியர்ஒருவர் தலைவராகத் தெரிவுசெய்யப் பெற்றதையிட்டு அவர்கள் மகிழ்ச்சி காண்பித்தார்கள்.

ஓர்மாணவன்

கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M. B. 2084

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

வண்ணார்பண்ணைமேற்கு, நாவாந்துறை முருகன் சின்னவன் —வழக்காளி

எதிராக

வண்ணார்பண்ணைமேற்கு, நாவாந்துறை

1. பிலிப்பு பிலேந்திரனும்,
2. பெண் அப்புலோணியாவும்.

இறப்பிட்டி

3. பெரியதம்பி தம்பிமுத்தம்,
4. பெண் சரஸ்வதியும். —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2084-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு அண்டுக் காணியை 1959-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 1427-25-ம்,இன்னும் ரூபா 1000-த்திற்கு 27-2-58 தொடக்கம் 31-7-58 வரையும், 100-க்கு 10% வட்டியும், பின்பு,கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 204-60.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "ஆமிலடி" பர. நில. இலா. ஒன்றும், எட்டில் ஏழும் (பர. நில. இலா .1⅞). எல்லை: கிழக்கு—அந்தோனி முத்தையாவுக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். வடக்கு—காணிக்குப்போகும் கை ஒழுங்கையின் முற்பகுதியும், யோசேப் சீமாம்பிள்ளையுடைய ஆதனமும். மேற்கு—யோசேப் திரவியத்தக்கும்,சின்னப்பொடியர் உடைய ஆதனமும். தெற்கு—M. M. மரிக்காயர் சுல்தான் அப்துல்காதருடைய ஆதனம்.

D. N. ஆசீர்வாதம்,
கொம்மிஷனர்.

20-8-59

"ஒற்றுமையினம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

எங்கள்பாடசாலைத் தலைமைஆசிரியரின் அயராமுயற்சியினால் மாதர்சங்கமும், பிரத்தியேகதையல்பயிற்சிவகுப்பும் நடைபெற்றுவருகின்றன. இங்குள்ள பெண்மணிகள் தங்கள்ஓய்வுநேரங்களில் தையல்வகுப்பில்கலந்துபயிற்சிபெறுகிறார்கள். எங்கள்கிராமம் முன்னேற்ற மடைவதற்கு இதுவோர் சிறந்தவழியாகும்.

— நிருபர்

அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென்வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்

கேட்ட நன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00 — ஏழாலை: பி. ஏ. பிள்ளை 5-00 — கல்கமுவா: எஸ். எஸ். பிள்ளை 1-00, எஸ். ஏ. பிள்ளை -50, பி. செபஸ்ரியன் 2-00— மஸ்கேலியா: மிசெஸ் எம். ஜே. எஸ். மேரி 1-00 — மிசெஸ் பீரிஸ் 1-75 உச்சுவேலி: ஏ. எஸ். பஸ்ரியன் 3-00 — அச்சுவேலி: மிசெஸ் பஸ்ரியன் 5-00 — சுன்னாகம்: கே. ஏ. பொன்னையா 7-00 — முள்ளியவளை: வி. சூசானம் 1-00, ஆர். திரேசம்மா 1-00, ஏ. ரோசம்மா 1-00, ரி. மதலேனு 1-00, எஸ். அக்கினேஸ் 1-00, எம். ரோசம்மா 1-00, எஸ். பாக்கியம் 1-00, எஸ். திரேசம்மா 1-00 — செட்டிகுளம்: ஜே. இராயப்பு 5-00—கல்பிற்றி: எஸ். பி. சோனீஸ் 7-00 —அரிப்பு: மிசெஸ் ரூஸ் 3-00, மிசெஸ் பீரிஸ் 2-00 — சூராவத்தை: ஆர். கத்திரு 3-00, எஸ். சின்னத்தங்கம் 4-00—புத்தளம்: என். ஜே. அல்பிறெட் 3-00 — வேப்பங்குளம்: எம். பிலோமினம்மா 2-00 — முகமம்: மிசெஸ் ஜே. நட்ணம் 3-00 — கொஸ்லான்ட்: எஸ். கே. எம். பிள்ளை 10-00—தலவாக்கலை: ஏ. பி. எஸ். 25-00 — மாம்புரி: எஸ். எஸ். பிள்ளை 2-00, ஜே. அல்மேதா 5-00 — பண்டாரவளை: மிசெஸ் பீற்றர் 1-00 — முந்தல்: எம். ஏ. பிள்ளை 3-00 — முள்ளிக்குளம்: வி. எஸ். ரூஸ் 1-00—இற்றலை: பி. அன்ரன் 3-00 — மலாயா: ஏ. ஏ. சாமுவேல் 2-80 — ஈச்சமோட்டை: ஜி. யோசவ் 1-00—அடம்பன்: ஏ. ரோசலின் 5-00 — பண்டத்தரிப்பு: எம். எஸ். மரியநாயகம் 5-00—மிருசுவில்: பி. ஜே. அதில் 1-00 — நாவற்காடு: எஸ். எஸ். பிள்ளை 2-00 — நுவரெலியா: ரி. ஏ. செபமாலை 2-00 — பாண்டியன்தாழ்வு: பி. நீக்கிலாப்பிள்ளை 5-00 — மடுரோட்: எம். சங்கரப்பிள்ளை 5-00 — மன்னார்: சி. ஏ. வி. பத்மராசா 1-00—நீர்கொழும்பு: மிசெஸ் ஆர். என். வில்லவராயர் 3-00 — பூக்குளம்: டி. டி. யோசவ் 3-00—அணுகல: பி. அன்ரனி 1-00—கொழும்பு: ஜி. அந்திரேஸ் 3-00—யாழ்ப்பாணம்: எம். யோண் பிள்ளை 1-00, ஓர்உபகாரி 2-00. மஸ்கேலியா: டி. எஸ். பீற்றர் 5-00.

JAFFNA MUNICIPAL COUNCIL.

Supplementary Budget No. 1 of 1959

NOTICE is hereby given in terms of section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that the Supplementary Budget No. 1 of the Jaffna Municipal Council for the year 1959 will be open to public inspection at the Municipal Office for seven days from 29th August, 1959.

Alfred T. Durayappah
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 21st August 1959.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின்திரு இருதய நாதரின் இரக்கத்தினாலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் பேருதவியினாலும் எனக்கு வந்தவியாதி குணமடைந்ததையிட்டு, என் முழு இருதயத்தோடும் அவர்களுக்குத் தோத்திரம்கூறி, என் நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

பொ. அந்தோனிசாமி,
வத்தளைமுல்லை.

மிருசுவில் வாசரான
திரு. எஸ். என். சாமுவேல்
அவர்களின் புத்திரி
திருமதி மேரி பிலோமினு இராசாத்தி
அவர்களின்

19-ம் வருட

மரண ஞாபகம்

பிறப்பு: 22-6-1927 இறப்பு: 29-8-1940

வெண்பா

சீராரும் செல்வக்
குலக்கொடியே சேயிழையே
நீராரு நின்றனமுன்
அன்னை தந்தை—பேரார்
பெருமானடி சேர்ந்த
நாளிதென உள்ளம்
உருகுதையோ
நெஞ்சம் உளைந்து.

விருத்தம்

சீர்மை பெறுமெம்
மகளே எழில் சோபை
நேர்மைக்கு நிகர்
ஏணியாளுய் பிலோமினுவே
பார்மீத்த பத்தொன்ப
தாண்டும் படும்துயரம்
ஆர் தீர்ப்பார் அந்தோ
அமலனருள் வேண்டுவாயே.

— பெற்றோர்.

ஓர்துயரியிலே கண்கண்ட புதுமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாயே, உம்மில்நம்பிக்கை வைக்கிறேனென்று அவர்சலுகைநாடினர். நிம்மதியடைந்தார். மனந்திரும்பினர். திருச்சபையுடன் சமாதானஞ்செய்து உத்தமகத்தோலிக்கராய் ஒழுகத்தொடங்கினர்.

பிரஸ்தாபம்பெற்ற தம்முடைய திருசேத்திரங்களில் தேவதாயார் தமதுஅருளால் செய்துள்ள ஆச்சரியகரமான அற்புதங்களைப் பற்றி அதிகமதிகம் கேள்விப்படுகிறோம். ஆயினும் வறியபாவிகளின் ஆத்துமங்களில் அறியப்படாமலே நடந்தேறுகின்றவரப்பிரசாதத்தின் பெரும்புதுமைகளை நாம் கவனிப்பதுமில்லை, கணிப்பதுமில்லை. அதிகமதிகமான மனந்திரும்புதல்கள் மரியாயின்வல்லபமிக்க சலுகையினால் நடைபெறுகின்றனவென்று நாம் நிச்சயமாகச் சொல்லலாம்.

● உலகஅகதிகள் வருடத்துக்குத் தனது பங்குத்தானமாக உலகில் அதிகம் சனநெருக்கமுடைய நாடுகளில்ஒன்றான பெல்ஜியதேசம் 3,000 அகதிகளைத் தனதுநாட்டில் குடியேற்ற விருக்கின்றது. ஐக்கியஅமெரிக்கதேசம் அளித்துள்ள விசேஷபங்குத்தானமாகிய 5,50,000 பவுணிலே ஒருபகுதிகம்யூனிஸ்த சீனாவிலிருந்துவந்த அகதிகளின் கஷ்டநிவாரணத்துக்காகச் செலவிடப்படவிருக்கிறது.

● ஆசா. யோசேவாஸ்முனிவர் பரமபதமடைந்த 250-ம்ஆண்டு நிறைவுதினம் அடுத்துநிகழும் 1961-ம்ஆண்டு தைமாதம் 16-ந் திகதி வருகின்றது. இதனை ஞாபகப்படுத்துமாறு அவரின் பிறப்பிடமாகிய மோர்முகோவா நகரசபைகோர்ராலிம்எனுமிடத்து ஆற்றுத்துறையிலே அவருடைய சுரூபம்ஒன்றைஸ்தாபிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 27-1959.